உ

சற்குருதுணை

சத்தியசன்மார்க்கப் பிரகாசிகை.

மூன்றும்பாகம்.

இது

சிதம்பரம்

ஸ்ரீ முத்துராமலிங்க சுவாமிகளால்

இயற்றப்பட்டு,

கடம்பத்தூர் ம-௱-௱-ஸ்ரீ

சே. வடிவேலுமுதலியா ரவர்கள்

விருப்பத்தின்படி,

காஞ்சிபுரம்:

ஸ்ரீ பெருந்தேவி விலாசப் பிரஸ்ஸில்;

பதிப்பிக்கப்பட்டது.

1917.

உ

சற்குருதுணை.

சத்தியசன்மார்க்கப் பிரகாசிகை.

மூன்றும்பாகம்.

இது
சிதம்பரம்
ஸ்ரீ முத்துராமலிங்க சுவாமிகளால்
இயற்றப்பட்டு,
கடம்பத்தூர் ம-ா-ா-ஸ்ரீ
சே. வடிவேலுமுதலியா ரவர்கள்
விருப்பத்தின்படி,

காஞ்சிபுரம்:
ஸ்ரீ பெருந்தேவி விலாசப் பிரஸ்ஸில்
பதிப்பிக்கப்பட்டது.

1917.

உ

சற்குருதுணை.

சத்தியசன்மார்க்கப்பிரகாசிகை,

மூன்றும்பாகம்.

கடவுள்வாழ்த்து.

வாரணமுகவனை வள்ளிமணாளனை
நாரணனைக்குரு நாதனைவேதனைப்
பூரணனன புராரியையம்மையை
யோரணியுளமதி லெண்ணுதுயாமே.

91/1

உ

சத்தியசன்மார்க்கப்பிரகாசிகை.

மூன்றும்பாகம்.

சிற்றறிவுள்ள சீவர்களாகிய நாம் சுதந்தர கீனர்களாதலால் ஒன்றையுள்ளவாறு நன்குணர்தலும் அதன் வழிநிற்றலு முடியாவாமெனத் தேர்ந்து தெளிந்து முற்றறிவுஞ் சுவதந்திரருமாகிய இறைவனை மறவாது அவரது பேரருளையே முன்னிட்டு நின்று முறைப்படி கற்று நன்குணர்தல் வேண்டும். இவ்வண்ணந் திருவருளை முன்னிடாது எவ்வளவு நூல்களைக் கற்பினும் எத்துணை யறங்களைச் செய்யினுஞ், சந்தேகம் விபரீதமின்றி, உண்மை நன்குணர்ந்து பேரானந்தப் பெருவாழ்வுற்றுப் பிறப்பறுத்தல் ஏலாவாம், என்பது மனமொரு நெறிப்பட் டுண்மை நன்குணர்ந்த திருநெறிச் செல்வர்களாகிய. அருட்பெருந்தகையார் யாவர்க்கு முடன்பாடே யாமென் னுமியல்பை யொருவாறு இரண்டாம் பாகத்தில் விளக்கிக் காட்டினேம். மீண்டு மதனை வலியுறுத்தற் கிம் மூன்றும்பாகத்தின் முதற்கண் ணும் பிறிதோராற்றால் விளக்கப்பட்டதென் றுணர்க. பிரம கீதையிலு மிவ் வுண்மையை யுணர்த்தப்பட்டிருக்கிறது. (உ-ம் பிரம கீதை) சம்புவி னருளாலன்றி மால் யானும் சகல தேவதைகளு மந்த, வும்பனை யுணரோ மருள்பெறும் பொருட்டே யோதியயாவையு, முளவாம், செம்பொருடன்னை யருளினலொழியத் தெரிவினுற் றெரிகுவராக, நம்புமானுடவர் கையினுனுற்ற மறிவரோ நாசியாலொழிய" எனவும் (வைராக்கிய சதகம்) "ஏனை நூல்பல வோதினையோதவற் றிறையருளடையாதார்க், கூனவெம்பவ மொழிப்பதற்குள்ளமே யுபாயம்வேறிலை" எனவும், மற்றும் வருவனவற்றுற்காண்க. ஆகவே, இனியிறைவன் றிருவருளெவ்வுபாயத்தானும்பெறலாமெனின், சென்றபலபிறப்புகளிற் பலாபேக்ஷையின்றி

ராசையோ டன்பா லிறைவனை முறைப்படி யுபாசித்த புண்ணிய விசேடத்தால் இப் பிறப்பிலும் பேரன்போ டிறைவனை யுபாசனை செய்வோமாகி லவன்றிருவருளைப் பெற்றுக்கொள்ளலாம் இதுவன்றிப் பிற வுபாயங்களால் இறைவன் றிருவருள் எத்துணை யாற்றலுளரேனும் அன்னோர்அருளோர் சிறிதுமடையார், என்பது எல்லா நூல்களினது துணிவாமென் றறிக, ஆதலால் அவ்விறைவனை யுபாசனைசெய்யும் சாதகருக்கும் இறைவன் றிருவருளாலுண்மை ஞானமடைந்தபெரியாருக்கும் இன்றியமையாச் சாதனமாவது, இறைவன் றிருவுருவமும், திருநாமமும் ஆகிய ஸ்ரீ பஞ்சாக்கரமேயாம். என்பர். உபாசகருக் கிம்மந்திரம் இன்றியமையாச்சாதனமாமென்பதுபொருந்தும். உண்மை ஞானமுற்ற பெரியாருக் கிம்மந்திரஞ் சாதனமாவதெங்ஙனமெனில், இங்குவிருந்த பாண்டம்போலக் கெட்டதற்போத மீட்டு நிகழாவண்ணஞ் செய்வதற்குரிய சாதனமாமென் றுணர்க. இவ் வுண்மை நினைவித்துத் தன்னை யென்னெஞ்சத் திருத்தி நின்றம்பலத்துப்புனைவித்த வீசன், எனவருந் திருக்கோவையாரானுங் காண்க, மந்திரங்களின் மகிமை முதலியவற்றை நன்குணர்ந்தாலன்றி யம்மந்திர செப முதலிய செய்தற்கண் யாவர்க்கும் உளக்கமுதலியன உண்டாகமாட்டாதாதலாற் பிறவிப்பிணி தீர்ந் துய்வதற்கு முக்கிய கருவியாயிருக்கும் ஸ்ரீ பஞ்சாக்கரம் பிரணவமுதலிய மூலமந்திரங்களின் றன்மையை இரண்டாம்பாகத்திறுதிக் கண்டொகுத்துக் கூறியவற்றை இறைவன் றிருவருட் சகாயத்தால் இம்மூன்றாம்பாகத்திற் பெரியாருளிச்செய்திருக்குஞ் சாஸ்திரானு சாரக்கிரமம் ஒருவாறுவகுத்துக்காட்டிப் பின்னர், இறைவனருள் பெறுவதற்குரிய யுட்பூஜையாம், மானசாராதனக் கிரமத்தையும் அதன் பின்னர் சிவனோ டொற்றுமைப்பட நின்று தன்னைப் பாவிப்பதாகிய ஆத்ம ஞான மோன

மென்னும் அத்துவிதத்தை யுணர்த்தும் வேதாந்த மகாவாக்கிய நிச்சயார்த்தத்தையும், அதன் பின்னர் இந் நூலுக்குச் சத்திய சன்மார்க்கப் பிரகாசிகையெனப் பெயரிட்டதற்குரிய முக்கிய காரணத்தையும் முறையேவிளக்கிக்காட்டுதும். (பிரணவவியல்பு) பிரணவம்:— பரப்பிரணவம், அபர பிரணவமென விருவகைப்படும். பரப் பிரணவமாவது சச்சிதானந்த சொரூபமாகிய சிவமே இன்பத்தைப் பெருக்கும் ஆதிக்கத்தோடு பொருந்தவிருப்பது. அபரப் பிரணவமாவது மாயா சொரூபமாய்ச் சத்தவடிவமாய்ச் சிவ தத்துவ வுண்மை ஞானமாகிய ஆதிக்கத்தை யுண்டாக்கி ஆன்மாக்களுக்கு எல்லா நன்மைகளையுந் தருவது. வாசகமாகிய வதுவாச்சிய மாகிய பரப்பிரம்மத்தை யடைவதற்குக்கருவியாய் எல்லாப் பொருள்களுந் தோன்றுவதற்கு மூலமாயுள்ள அகர, உகர, மகரம் என்னும் அக்கரங்களின் வடிவாய் பரசிவம் பிரதி விம்பித்தற்கு விம்பமாய் அப் பரசிவமுந் தானும் இரும்பும், நெருப்பும்போல வேறன்றாய்ச் சிவவாசகமாயிருக்கும் என்பர். (சூதசங்கிதை எக்கிய வைபவகாண்டம் பிரணவமுரைத்த அத்தியாயம்) அகநில விப்பிரணவத்துப் பரசிவமே பிரதிவிம்பமாயிருக்கும் அகலமுறவாதலின் மற்றதுசிவவாசகமென்றேயறிஞர்சொல்வர், அகமில் பரம்பொருளதுவு மிதுவுமிரண்டல விரும்புமழலும்போலும், எனவும்: பேராரிப் பரசிவமும் பிரணவத்தின் வேறாகாப் பெற்றியாலே எனவும், வருமாற்றாலும் ஓங்காரமாகிய சர்வேசுரரைத் துவாதசாந்தத்தில் உபாசிக்க என்று தாபநியோபநிடதத்திற் கூறுமாற்றாலு முணர்க. பிரதமம் தாரகா

காரம் த்விதீயம் தண்டமுச்யதே, த்ரிதீயம் குண்டலாகாரம் சதுர்த்தம் அர்த்தசந்த்ரகம், பஞ்சமம் விந்துசம்யுக்தம் பிரணவம் பஞ்சலக்ஷணம், என்று சுருதிகூறியபிரகாரம் பிரணவம் ஐந்திலக்கணமுடைய தாதலாற் அப்பிரணவமானது பஞ்சாக்கர மென்னும் பெயரையுடைய தெனவுங் கூறுவர். பிரணவத்தில் மூன்றுவாக்கிய முடிவாய் இருபத்து நான்கு எழுத்துவடிவாயுள்ள காயத்திரியானது வியாகிருதிகள் ஏழோடு பிறக்கும். அன்றி அகர முதலிய ஐம்பத்தோ ரக்கரங்களுந் தோன்றும் என்பர். (வியாகிருதிகள் ஏழென்றதுகாயத்திரிக்குரியஅங்கங்களையென்றறிக) இப்பிரணவம் சமஷ்டி வியஷ்டி பேதத்தால் இருவகைப்படுமென்றும் வியஷ்டிப் பிரணவமாகிய மூன்றும் முறையே இறந்தகாலமுதலிய காலங்களையும் சாத்வித முதலிய குணங்களையும் திரிமூர்த்திகளையும் காருகபத்திய முதலிய அக்கினிகளையும், இருக்கு முதலிய வேதங்களையும் உணர்த்தாநிற்குமென்று கூறுவர். அன்றி அகரம் வாய்திறத்தலினாலே சிருட்டியையும், உகரம் இதழ் குவிதலினாலே திதியையும், மகாரம் வாய் மூடுதலினாலே சங்காரத்தையும் குறிப்பிக்கின்றமையால் எல்லா வுலகங்களும், எல்லாச் சுருதிகளும் இந்தப் பிரணவத்திற்றோன்றி நின்றொடுங்கும் எனவும் கூறுவர். பிரணவம் அகார உகார மகாரங்களாக விரிந்து மூன்றெழுத்தாயும், இம் மூன்றுங்கூடி யோமென் றுச்சரிக்கப்படும்பொழுது நாதமாயும், ஒ மென் றெழுதும்பொழுது விந்துவாயுமிருப்பதால் விந்து நாதங்களாகிய வரிவடிவும் ஒலி வடிவுங் கூடி ஐந்தெழுத்தாயிற்றென் றும் புகல்வர்.

மேலே செப்பிய ஓங்கார விலக்ஷணங்க ளைந்தில் நக்ஷத்திர வடிவம் தண்ட வடிவமாகிய விரண்டும் மற்றைய மூன்றங்கங்க ளில்லாவிடின் புடை பெயர்த லின்மையால் அதனை யூமை யக்கரமெனவும் உபநிடத முடிவிலுள்ள மோனக்குறியெனவும் அக்கரங்க ளெவற்றிற்கு மூலமெனவும் பிள்ளையார்சுழி யென்வும் ஒப்புமைபற்றி இன்னு மனேகவிதமான பரி பாஷைகளாற் புகழ்ந்து பாராட்டும் பெருமையுடைத்தாயு மிருக்கின்றதோடு ஒன்றை எழுத வுபக்கிரமிக்கு முன்னர் எழுதிக்கொள்ளுமியல்புடையதாயுமிருக்கிறது. இச் சம்பிரதாயம் வடமொழி, தென்மொழியிலன்றி மற்றைய பாஷைகளில் இன்றெனப் பிரசித்தமாய்த் தெரியவருகிறது. இத் துணைப் பெருஞ்சிறப்புடைய பிள்ளையார் சுழியை யந்தர்ப்பாவமாயுள்ள மூல மந்திரம் ஆகிய பிரணவமென்னுஞ் சொல் வியாகரண முறையாய்ப்ப குத்துப் பொருள் கூறு மியல்பு எவ்வாறெனில், (நு - துதித்தல்) என்ற தாதுவிலிருந்து தோத்திரமென்ற பொருளில் நவ என்ற சொல்லுண்டாக அதனோடு (ப்ர) என்னும் உப சர்க்கத்தைச் சேர்க்க ப்ரணவமென்ற சொல் லமைந்ததென்பர். ஒருகா லுச்சரித்தவனை யுயர்ந்த நிலையிற் செலுத்தும் ஆற்றலுடையதாயிருத்தலாற் பிரணவமானது ஓங்காரமென் றறையலாயிற்றென் றுரைப்பர். இப்பிரணவமே யாதியி லுபதேசிக்கப்பட்டதென்றும், அதுவே தியானம் அதுவே தியானிக்கத்தக்கது என்றும் அதர்வசிகோபநிடதங் கூறுகிறது. அன்றியும் எல்லாத் தேவர்களுக்கும், எல்லாச்சுருதிகளுக்கும் இதுவே காரணஸ்தானமென்னும் பொருள் தோன்ற (சர்வ தேவ வேத யோநி:) என்று புகன்றிருக்கின்றது. மேற்குறித்த அதுவே தியானம், அதுவே தியானிக்கத்தக்கது, என்பவற்றை விளக்கும் உபநிடத சுலோகம், (ஓமித்யக்ஷரமேததாதௌ ப்ரயுக்தம்த்யானம் த்யாயிதவ்யம்) என்று கூறுமா

ற்றுற்காண்க. இவற்றிற் கியையச் சிவதருபோத்தரமும், ஓ மென்னும் பதமதனில் வேதமாதி யுற்பவிக்கு மாலம் வித்திலு திக்குமாபோ ல் என்று கூறுகின்றது. வேதத்துக்கு ஓம்தத்சத் என்று மூன்று விதங்களான சப்தங்கள் அந்வயிக்கின்றது அந்த மூன்று சப்தங்களோடு சேர்ந்து பூர்வம் பிராமணர்களும் யஜ்ஞ ங்களும் வேதங்களுமுண்டாக்கப் பட்டனவென்று பகவற்கீதை பதினேழாவதத்தியாயம் 23ம் சுலோகவுரையிற் கூறப்பட்டிருக் கின்றன. அன்றி, (திருமந்திரம்) ஓ மென்னு மோங்காரத்துள் ளே யொருமொழி—ஓ மென்னுமோங்காரத்துள்ளே யுளபேதம்— ஓமென்னுமோங்காரத்துள்ளேயுருவரு—ஓ மென்னு மோங்கார மொண்சித்தி முத்தியே, என்று ஓங்காரத்தினது சிறப்பு கூறப் பட்டிருக்கிறது. பிரணவ மகாமகிமைகளினியல்பு முதலியவற் றை, இன்னும் விரிக்கிற் பெருகுமாதலால் விரிவஞ்சி விரிக்கி லேம். இனி, (ஸ்ரீ பஞ்சாக்ஷர வியல்பு) தொன்றுதொட்டுத்த ம்மை வருத்தும் பவப்பிணி நீங்கியுய்யக் கருதுவோர்க்கு அப்பி ணியை நீக்கவல்ல பரமவைத்தியராகிய சிவபெருமானை யுணர்த் துமந்திரம்பஞ்சாக்கரமேயாதலா லதனியல்பு சிறிதுவிளக்குதும்.

வேதமொரு நான்கு மாறங்கமு நன்னியாய மீமாஞ்சை மிருதி புராணமும் வித்தைகளா மென்று கூறப்பட்ட பதினான்கு வித்தைகளுள்ளும் வேதமே மேலானதென்றும் அவ்வேதத்துள் ளும் உருத்திரைகாதசினி மேலானதென்றும் அதினுள்ளும் பஞ்சாக்கரமேலானதென்றும் அதினுள்ளும் சிவ என்னும் இர ண்டெழுத்தே மேலானதென்றும் அப்பதீக்ஷிதர் இயற்றிய சிவ தத்துவ விவேகவிருத்தியிற்கூறப்பட்டிருக்கின்றன. அன்றிவே தபுருடனுக்கு உருத்திரம் கண்ணென்றும் அதனுளிருக்கும் பஞ்சாக்ஷரங் கண்மணியுமாமென்றும், சதுர்வேத தாற்பரிய சங்கிரகத்திற் பேசப்படுகின்றன. (அவற்றின் விபரம்) ருக்,

யஜுர், சாமம் என்னும் வேத மூன்றனுள் மத்தியி லுள்ளது யஜுர்வேதம் இவ்வேதம் நூற்றொருசாகைகளையுடையது. இவற்றுண்மத்தியிலுள்ளது போதாயனசாகை, இச்சாகை ஏழு காண்டங்களையுடையது இதனடுவேயுள்ளது சதருத்ரீயம் இதன் மத்தியுட், பஞ்சாக்ஷரம் அவிரொளி விட்டிலங்குகின்றதென்று ணர்க. இவ்வுண்மையை, மும்மறையினடுமெறையின் முனிவி லெழுகாண்டமதிற்—செம்மைநடுக்காண்டத்திற் சேர்ந்த வெழு சங்கிதையில்—அம்மை நடுச்சங்கிதையி லாதியீ ரேழித்துமறை பொம்மலுறவமர் மநுவின் பொருளாவா னெவன் மைந்தா வென மேலோரருளிச் செய்திருக்குஞ் செய்யுளாற் காண்க. ஆகவே. இப் பஞ்சாக்கரம் சகல வேதாந்த சாரமாயும் அதி ரகசியமாயுள்ள வோர்மந்திரமாயும் இருத்தலால் இதுவே நான்கு வேதங்களின் மெய்ப்பொருளெனவும் (வேதநன்குணர்ந்த வேதி யர் அந்தியுள்) அதாவது சந்தியாகாலங்களில் ஓது மந்திரமென வும் மற்றும் இம்மந்திரத்தின தருமை பெருமைகளாகிய அதி நுட்பங்களையும், சிவஞானப்பாலுண்டு ஓதாது தாமே வேத முழுதுமுணர்ந்த ஸ்ரீ ஞானசம்பந்தப்பெருமான் சிவ மணங்க மழத்தாந்திருவாய்மலர்ந்தருளிய திருநெறித்தமிழ் வேதத்துள், (காதலாகிக் கசிந்துகண்ணீர்மல்கி) என்றபாசுரத்தில் (வேதநான் கினும் மெய்ப்பொருளாவது நாதநாமம் நமச்சிவாயவே) எனவும் (செந்தழலோம்பிய செம்மைவேதியர்க் கந்தியுண்மந்திரம் அஞ் செழுத்துமே) எனவும் மற்றும் ஸ்ரீ பஞ்சாக்கரத்துள் அடங்கி யுள்ள அரிய பெரிய விஷயங்களனைத்தும் நன்கு விளங்கும்படி யருளிச்செய்திருக்கின்றனர். திருநாவுக்கரச ரென்னுந் திரு வருட் பெயர்பூண்ட வாகீசப் பெருந்தகையாரும் தான் திருவாய் மலர்ந்தருளிய தமிழ் வேதமாகிய தேவாரத் திருப்பதிகங்களிற்

பல விடத்திற் பஞ்சாக்ஷரத்தி னருமை பெருமைகளி னதி நுட்பங்களை விளக்கியருளி யிருக்கின்றனர். அவற்றுட் சில வருமாறு, அடியிற்காண்க. (சொற்றுணைவேதியன்) என்னும் பாசுரத்தில் (நற்றுணையாவது நமச்சிவாயவே) எனவும்,(முன்னெறியாகிய முதல்வன்முக்கணன், றன்னெறியேசரணாதல் திண்ணமே, யந்நெறியேசென் றடைந்தவர்க்கெலாம், நன்னெறியாவது நமச்சிவாயவே) எனவும், நமச்சிவாயவே ஞானமுங்கல்வியும், நமச்சிவாயவே நானறிவிச்சையும், நமச்சிவாயவே நாநவின்றேத்துமே, நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே) எனவும், (கருவாய்க்கிடந்துன் கழலேநினையுங் கருத்துடையேன்) என்ற பாசுரத்தில், (திருவாய்ப்பொலியச் சிவாயநமவென்று நீறணிந்தேன்) எனவும், (தூமென்மலர்க்கணை) என்றபாசுரத்தில், (அஞ்செழுத்துஞ் சாமன்றுரைக்கத் தருதிகண்டா) யெனவும், மற்றும் வருவனவற்றுற்காண்க. (ஓவுநாளுணர் வழியுநாளுயிர் போகுநாளுயர் பாடைமேற், காவுநாளிவை யென்றலாற்கரு தேன்கிளர்ப்புனற்காவிரிப், பாவுதண்புனல் வந்திழிபரஞ் சோதிபாண்டிக் கொடுமுடி, நாவலாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே) எனவும், மற்றும் வருவனவற்றுற் காண்க. இனி, ஓதுவோராவியை யுருக்கும் ஞான மணிவாசகப்பெருமானும், தான்திருவாய் மலர்ந்தருளிய தமிழ்வேதமாகிய திருவாசகத்துள், ஸ்ரீ பஞ்சாக்கரத்தின் மேன்மைகளை நன்றருளிச்செய்திருக்கின்றனர். அவையாவன:— (நமச்சிவாயவாஅழ்க) எனவும், (போற்றியோ நமச்சிவாய) வெனவும், (அஞ்செழுத் தி

ன் புணே பிடித்துக் கிடக்கின்றேனே) எனவும். மற்றும்வருவன வற்றுற் காண்க, இன்னும் ஸ்ரீ பஞ்சாக்கரத்தின் மகிமையை சைவத் திருமுறைகளில் ஆங்காங்குவந் துழிவந்துழிக்காண்க, சரீர மத்தியிலுள்ள இருதயத்தில் ஆன்மாவிருந்துதேகமுழுமை யும் மங்களகரமாம்படி விளக்கி இயக்கி விளங்குந் தன்மைபோ லக் காந்திப்பொருள்தரும் (வஶி) யென்னுஞ் சொல் வர்ணவிப ரியயமுறுதலாற்றுல் சிவவெனப்படும், இச்சிவ சப்தம் வேத மத்தியிலிருந்துகொண்டு வேத முழுமையுஞ் சிவமணங் கமழச் செய்து மங்களகரமா விளங்குகின்றதென்று அதர்வ சிரோப நி டதமுதலிய வுபநிடதங்களெல்லாம் புகழ்கின்றன, அன்றிச் சிவ வென்ற சொல்லானது பரப்பிரம்மத்துக்கு இடுகுறிப் பெயரா யுளதென்று மாண்டூக்கிய முதலிய வுபநிடதங்கள் கூறியவாறு ஸ்ரீ வாகீசப் பெருந்தகையாரும், சிவனெனு நாமந் தனக்கேயுரி ய செம்மேனி யெம்மான் என்றருளிச் செய்திருக்கின்றனர். அன்றிக் குறிகுணங்கள் கடந்த திருக்கூத்தனுகிய சிவபெருமா னுக்கு, ஸ்ரீ பஞ்சாக்கரமே திருமேனியுமாம், ஸ்ரீ பஞ்சாக்கரம் சிவபிரானுக்குத் திருவுருவமாம் விபரம். திருவடி நகாமாகவும் திருவுதரம் மகாமாகவும், திருத்தோள் சிகரமாகவும், திருமுகம் வா, ஆகவும், திருமுடி யகரமாகவும், உள்ளதென்றுணர்க. உதா ரணம் உண்மைவிளக்கம்:— (ஆடும்படிகே ணல்லம்பலத்தானை யனே, நாடுந்திருவடியிலே நகரங்கூடு மகாமுதாம் வளர்தோள் சிகரம், பகருமுகம்வாமுடியபார்) என்று கூறுமாற்று லுணர்க. இனி யிறைவனுடைய திருநாமம் பஞ்சாக்கரமென்பதை, (நம்ப

ஞமம் நமச்சிவாயவே) என்றும், (நாதனுமநமச்சிவாயவே) யென்றும், முன்னமேகூறியுள்ளதிருப்பாசுரங்களாற்காண்க. ஸ்ரீபஞ்சாக்கரமந்திரமும்பிரணவத்தைப்போலத்தனிமந்திரம்ஆதலாலும் பிரணவம் வேறுதுணைவேண்டாதுச்சரிக்கப்படுவதுபோலப் பஞ்சாக்கரமும், பிறிதொன்றின் ஆஸ்ரியமன்றிச் செபிக்கப்படுதலானும், அன்றியிரண்டுஞ் சிவவாசகமாகவும், சிவவடிவமாகவும் சிவநாமமாகவும், இருத்தலினானும், அன்றி ஆலம்வித்தைப்போற் றன்னுள் அளவிலாப் பொருள்களை யடக்கிக்கொண்டு விளங்கும் மந்திர ராஜமாம் பிரணவம்போற் றானும் எல்லாப் பொருள்களையுந் தன்னு ளடக்கிக்கொண் டெல்லாவற்றிற்குந் தலைமை பெற்று விளங்குந் தன்மையாலும், இப் பஞ்சாக்கரமானது பிரணவத்தினின்றும் வேறுறுதெனப் பெரியர் கூறுவர். ஆதலால் ஸ்ரீ பஞ்சாக்கரத்துக்குள்ளே சமஸ்தத்தையும் அடக்கிக் காட்டுவார்களத னுண்மையை யுணர்ந்த மேலோர் அன்றி இம் மந்திரமே பிறவிக்கடலைத்தாண்டி முத்திக்கரை சேர்க்கும் தெப்பமாமென்பர். இன்னும் இம்மனுவின் மகிமையைப் பல பிரகாரம் புகழ்ந்து பாராட்டுவார்க ளதி மேதாவியராம் பெரியார் இத்துணைப் பெருஞ்சிறப்புவாய்ந்த விம் மகா மனுவின் மாட்சியையுள்ளவா றுணர்ந்த திருவருட் புலமை சான்ற சேக்கிழார் நாயனார் அருட் காப்பியமாகிய திருத்தொண்டர் புராணத்துள் ஆங்காங்கு, ஸ்ரீ பஞ்சாக்கரத்தின் மகிமை முதலியவற்றை நன்கு விளக்கிக்காட்டியிருக்கின்றனர். அவற்றுட் சில வருமாறு திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம். 129-வது திருப்பாடல், இருவினைப்பாசமு மலக்கலார்த்தலின்–வருபவக்கடலில் வீழ்மாக்களேறிட–அருளுமெய்யஞ்செழுத் தாசையிக்கட–லொருகன்மேலே

ந்றிட லுரைக்கவேண்டுமோ- எனவும், பெருமிழலைக் குறும்ப நாயனுர் புராணம், 6-வது திருப்பாடலுள், மூளுங் காதலுடன் பெருகமுதல்வர்நாம மஞ்செழுத்தும்-கேளும்பொருளு முணர்வு மாம் பரிசுவாய்ப்பக் கெழுமினுர் - எனவும், திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்துள், (ஞானமெய் நெறிதான்யார்க்கு நமச்சி வாயச்சொலா மெனவும், தடுத்தாட்கொண்ட புராணம் 159-வது திருப்பாடலில், பஞ்சின்மெல்லடிப் பாவையருள்ளமும்- வஞ்ச மாக்கடம் வல்வினையுமான்-அஞ்செழுத்துமுணராவறிவிலோர்-நெஞ்சுமென்னவிருண்டதுநீண்டவான்- எனவும், மற்றும் வரு வனவற்றுற் காண்க, இனிப் பஞ்சாக்கரத்துட் சமஸ்தத்தையும் அடக்கிக்காட்டுவரென்றுமேலோர்கூறியதற்குதாரணம், ஸ்ரீகாஞ் சிபுராணம், (எவ்வெவைகோட்படுபொருளு மைந்தெழுத்திலடக்கி) யெனவருஞ் செய்யுளாற் காண்க இனி யிம்மனுவே பவக்கட லைத் தாண்டி முத்திக்கரையிற் சேர்ப்பிக்குமென்று மேற்கூறிய தற் குதாரணம், சூதசங்கிதை எக்கிய வைபவ காண்டம் பஞ்சா க்கா மந்திர முரைத்த அத்தியாயம். (பத்தியுட னெப்போதும் பன்னீராயிரஞ் செபிப்போன் பந்தபாச, வத்திதனைச்சிவஞானப் பெருந்தோணி கொடுனீந்தி யவிரானந்த, முத்திநெடுங் கரையடைவன்) என்பதனுற் காண்க. இன்னு மிப் பஞ்சாக்கா மந்தி ரத்தை, இருதலைக் கொள்ளி யெனவும், இருதலை மாணிக்கமெனவும், நாயோட்டி மந்திரமெனவும், ஊமை யெழுத்தெனவும், இதுவே வேதம் ஆகமம் புராணமெனவும் பெரியார் அருளிச் செய்திருக்கிறுர்கள். (அவை வருமாறு) உண்மை விளக்கம்.

அஞ்செழுத்தேயாகமமு மண்ணலருமறையும்—அஞ்செழுத்தே யாதி புராணமனைத்தும்— அஞ்செழுத்தே ஆனந்தத்தாண்டவ

மும் யாவைக்குமப்பாலாம்— மோனந்தமா முத்தியும்.) (எ-ம்) திருவருட் பயன்) அருணூலுமாரணமு மல்லாது மைந்தின்— பொருணூறெரியப்புகும், ஐந்தின் பொருணூல் தெரியப்புகும் என்பதற்குப் பொருள். பஞ்சாக்ஷரத்தின் உண்மையைச் சொல்லவந்த நூலென்று உரையிற் கூறப்பட்டிருக்கிறது. இவற்றால் ஸ்ரீ பஞ்சாக்கரமே, வேதாகம முதலியனவாம் என்பது காண்க. (இனி) அபாய மொழிப்பதற் குபாயமா மென்பதற் குதாரணம்) சிவாய நமவென்று சிந்தித்திருப்பார்க்— கபாயமொருகாலுமில்லை—உபாயம்— இதுவேமதியாகும் அல்லாதவெல்லாம்— விதியேமதியாய்விடும் என்று, ஔவையா ரருளிச்செய்திருக்குமாற்றா லுணர்க. (இனி) ஊமை யெழுத்தெனவு நாயோட்டி மந்திரமெனவும் கூறுவர் என்பதற்குதாரணம். திருமந்திரம்:— ஊமையெழுத்தொடு பேசுமெழுத்துறில்—ஆமையகத்தினி லைந்துமடங்கிடும்—எனவும், நாயோட்டுமந்திர நான்மறைவேதம்— நாயோட்டுமெந்திர நாதனிருப்பிடம்— நயோட்டுமெந்திர நாதாந்த சோதி— நாயோட்டுமந்திரநாமறியோமே—எனவும்— வருமாற்றா லுணர்க. (இனி) இருதலை மாணிக்கமென்றதற் குதாரணம்) ஒருதலைமாணிக்க முன்னரெனக் குபதேசஞ்செய்தான்— இருதலைமாணிக்கம் பின்னரும்பேசி யிருளறுத்தான்—விரிதலை மற்றையயன் றலைசூட்டிய கங்கையின்மூ— வெரிதலைச்சூலத் தொடுநடிப்பான் கச்சியேகம்பனே— என்று, மேலோர் அருளிய திருப்பாட்டா லுணர்க. இருதலை மாணிக்கமென்னும் காரண பஞ்சாக்ஷரத்தையே— இருதலைக்கொள்ளியெனவுங்கூறுவர். என்றறிக. ஆதலா லிப் பஞ்சாக்கரமே (நெற்றிக்குநேரே புருவத்திடைவெளி, யுற்றுற்றுப்பார்க்க வொளிவிடுமந்திரமாம்) அன்றி. இதுவே உலவாவின்பப் பெருஞ்சுடரை யுள்ளவாறுணர்த்தியதனை யடையச்செய்விக்கு மகாமந்திரமுமாம்— அன்றி, அரு

ளாரமுதப்பெருங்கடலி லழுந்தச்செய்யும் ஆற்றலுடைய வதிரக சியமநுவும் ஆம். அன்றி, இதுவே கள்ளமனத்துறவை விட் டெல்லாந்துறந்த பெரியோரால் உபதேசிக்கப்படு மொப்பற்ற வொரு மொழியாம் அன்றி, இதுவே தத்துவமஸியென்னு ம ஹாவாக்கியத்தின் பொருளைத் தன்னிடத்தந் தர்ப்பாவமாயுள்ள மகாமநு—அன்றி, இதுவே திருவெண்ணீற்று நெறிச்செல்வர் களுக் கலங்காராபரணமாகிய மூலமந்திரமாம்—அன்றி, இது வே, வெருவுறப்படும் பிறவியை வெறுத்து வீடுகாதலிப்பவர்க் குச் சிவாநுபூதிச் செல்வச் சிவாசாரியாராகிய பெரியோரால் உப தேசிக்கும் அருண்மந்திரமாம்—அன்றி, இதுவே தன்னுண்மை யுந் தலைவனுண்மையுமுணர்ந்து பாசந்தணந்து தானே தானகச் செய்விக்குஞ சிவரகசிய மூலமந்திரமும்ஆமென்றறிக. (இனித்) தியானிக்கப்படும் பொருளை யெதிர்முகமாக்கும் பொருட்டு அத னையுணர்த்துமந்திரத்தையுச்சரித்தலாகியசெபவியல்புகூறுதும். மந்திரமென்பதற்குக்கருதுபவனைக்காப்பது, எனப்பொருள்பட லால், தன்னை நினைப்பவனைக்காக்குந் தன்மையுடைய சிவத்துக் கும் சிவ சத்திக்குமே செல்லுமாயினும், வாச்சியமாகிய சிவசத் திகட்கும், வாசகத்துக்கும் அபேத மாந்தன்மைபற்றி உபசாரத் தால் வாசகத்துக்குஞ்செல்லும் ஆதலான் மந்திரம் வாசகவாச் சியமென்றிருவகையாமென்றறிக. இனியிம்மந்திரஞ்செபிக்கு முறை மூவகைத்தாம். (அவையாவன) ஒருமையோடு மனசி னுற் செபித்தல், மானசமெனப்படும். இனித்தன் காதுக்கு மாத் திரம்கேட்கும்படி செபித்தல், மந்தம் (அல்லது) உபாஞ்சு என்று கூறப்படும். பக்கத்திலிருக்கும் பிறர்செவிக்கும் கேட் கும்படி செபித்தல் வாசகம், (அல்லது) பாஷ்யமென்று பகரப் படும். இவைகள்~~முறையே~~ நூறுமடங்கு பதினுயிரமடங்கு கோடிமடங்கு பயனைத்தருமென்பர். மந்திரம் என்னுஞ்சொல்.

மந்—நினைப்பவன். திர—ரக்ஷிப்பது. வேதம், என்னுஞ் சொல்—அறிதற்குக் கருவியெனப் பொருள்படும். ஆதலால், அறிதற்கரியநுண்பொருளாம் பிரமத்தையும் உண்மை ஞானத்தையும் கருமோபாசனைகளையும் அவ்வவர்பக்குவங்களுக்கியைய வுணர்த்தும் பேராற்றலுடையதென்றறிக. இனி சாஸ்திரமென்பதற்குப்பொருள், சாஸ்—அருள்புரிவது. திர—காப்பது. ஆகவே, சீவான்மாக்களை நறியகட்டளைகளால் அருள் வயப்படுத்தி இரக்ஷிக்குமியல் புடையதென்று பொருள்படும், ஆதலால் இப்பெயர்கள், எல்லாம் வல்லவிறைவன்றிருவாய்மலர்ந்தருளிய நூல்களுக்கும் அவ்விறைவன்றிருவருளியல்பையுணர்த்தும் மந்திரங்களுக்கும், இறைவனருள்பெற்ற பெரியாரருளிச்செய்திருக்கும் உண்மைநூல்களுக்குமேசெல்லும் அவ்வாறன்றி அருள்சம்பந்தமில்லாத ஏனையமதநூல்கண் முதலியவற்றிற்கிப்பெயரிட்டு அவ்வவர்கள்கூறும் வாசகம்போலி அல்லது உபசாரவழக்கேயாமென்றறிக. ஆகவே ஸ்ரீ பஞ்சாக்கரமானது மேற்கூறிய முறைப்படி எல்லாப்பொருள்களையும் அறிதற்குக்கருவியாயும் உச்சரிக்கும் பக்குவசீலரை யருள்வயப்படுத்தி இரக்ஷிக்குமியல்புடைத்தாயுமிருத்தலால், அஞ்செழுத்தே யாகமும் அண்ணலருமறையும்—அஞ்செழுத்தே யாதிபுராண மனைத்துமாமென்று உண்மைவிளக்கத்தி லருளிச்செய்திருக்கிறபடி ஸ்ரீ பஞ்சாக்கர மகா மந்திரமே வேதாகம புராண சாஸ்திரமுதலிய யாவுமாமென்றுதுணிக.

இன்னும் ஸ்ரீபஞ்சாக்கரத்திலறியவேண்டும் பாகுபாடுகளினியல்புகளனைத்தும், அடியில் வருங் கொடிக்கவி முதலிய நூல்களினுரையாற்றெளிக.

(கொடிக்கவி) அஞ்செழுத்து மெட்டெழுத்தும் ஆறெழுத்து நாலெழுத்தும்—பிஞ்செழுத்து மேலைப்பெருவெழுத்து நெஞ்ச ழுத்திப்—பேசுமெழுத்துடனே பேசாவெழுத்தினையும்—கூசா மற் கட்டக்கொடி (இதன் பொருள்) சிவாயநம வென்கிற ஐந் தெழுத்தும். ஓம் ஆம் அவ்வும் சிவாயநம வென்கிற எட்டெழு த்தும். ஓம் நமசிவாய வென்கிற ஆறெழுத்தும். ஓம் சிவாய வென்கிற நாலெழுத்தும் உச்சரிக்கிற விதிப்படி யுச்சரித்துப் பின்னர் உச்சரிக்கு முறைமையைவிட்டுப் பஞ்சாக்கரத்தினுடை ய சொரூபத்தை யறிந்து, பிஞ்செழுத்தாம் வகரமாகிய பராசத்தி யையு மேலைப் பெருவெழுத்தாகிய சிகாரமாகிய சிவத்தையும் தன் னுடைய இருதயத்தில் வைக்கின் பேசுமெழுத்தாம் வகரமாகிய சத்தி, பேசா வெழுத்தாகிய சிகாரமாம் சிவத்தை யிரண்டறக் கூசாமல லழுத்திவிக்கக் கொடிக்கட்டினேன் என்றவாறு. இதன் கருத்து மேற்கூறிய முறையே அக்கரங்களை யுச்சரித்து ப் பின் அக்ஷர சொரூபத்தை யறிந்து சத்தி சிவான்மீகமாயிருக் கிற அக்ஷரத்தை ஹிருதயத்தில் வைத்தால் அந்தச் சத்தி தானே சிவனை யிரண்டறக் கலப்பிப்பளென்று பஞ்சாக்ஷரத்தினலே மோக்ஷத்தை யடையும்படிக்குக் கொடிக்கட்டினேன் என்பதாம்.

ஸ்ரீ பஞ்சாக்ஷரம் உச்சரிக்கிற முறைமையில், தூல பஞ்சாக்கரம் சூட்சும பஞ்சாக்கரம் அதி சூக்குும பஞ்சாக்கரம் என்னு மூன்று விதத்தையும், சிகாரம்—சிவம். வகாரம்—சத்தி. யகாரம்—ஆன்மா. நகாரம்—திரோதை. மகாரம்—மலம், ஆம் என்கின் ற பஞ்சாக்கரத்தின் பொருளையும் அறிந்து இதில் உள்ள நடன

மாகிய நகார மகாரங்களிற் சென்று ஜனன மரணப்படாமல் ஞான நடனமாகிய சிகார வகாரத்தை பொருந்திச் சிகாரமுதலாக வுச்சரித்துப் பின் உச்சரிக்குமுறைமை நீங்கி வகாரமாகிய ஞானந்தானாக நிற்கவே சிகாரமாகிய ஞேயத்திலே அழுந்துந் தன்மையுண்டாமென்றுணர்க இதற்கியைய உண்மைவிளக்கம் (சிவனருளாவிதிரோதலமைந்தும்—அவனெழுத்தஞ்சி னடைவாம் இவனின்று நம்முதலாவோதி லருளாடாது நாடுமருள்—சிம்முதலாயோது நீசென்று). இதன் பொருள்—சிவம் அருள் ஆன்மா திரோதம் மலம் ஐந்தும் பரமேச்சுரனுடைய பஞ்சாக்கரத்தின் முறைமைத்தாம். பக்குவப்பட்ட ஆன்மா நின்று நகார முதலாக வுச்சரிக்கில் அருள் பொருந்தாது ஆசாரியர் அநுக்கிரம் பண்ணின முறைமையிலே நின்று சிகார முதலாக வுச்சரிக்கில் அருள்பொருந்தும் என்றவாறு.

(இனித் திருவருட் பயன்) சிவமுதலேயாமாறு சேருமேற் றீரும்—பவமிதுநீயோதும்படி. இதன்பொருள்—சிகார—வகாரமென்னும் இரண்டு மாதிக்கண்ணதேயாம் வண்ணம் உச்சரித்தல் கூடுமாயின் அந்நிலையேயுனது பிறவித்துன்ப நீங்கும். இதனால் முத்தரோதுமாறு கூறப்பட்டது. வாசியருளியதை வாழ்விக்கு மற்றதவே—ஆசிலுருவமுமாமங்கு. இதன்பொருள் வகாரமாகிய வருள் சிகாரமாகிய சிவத்தினைக் காட்டி யகாரமாகிய வுயிரினை வீட்டின்பத்திலே யிருத்தும் அன்றியும் அவ்வருளே யச்சிவத்துக்குக் குற்றந்தீர்ந்த திருமேனியாயிருப்பது.—(இனி அந்த வான்மாமோக்ஷத்தில் இருக்கிறதெப்படியென்னில்) ஆசினவா

நாப்பணண்டயாதருளினல்—வாசியிடைநிற்றல்வழக்கு. இதன் பொருள்—குற்றத்தைப் பொருந்திய நகாரத்திலும் மகாரத்திலும் பொருந்தாமற் சற்குரு வருளால் அருளுக்கும் சிவத்துக்கு நடுவே நிற்கிறதே முறைமை. இதனுன்முறைமையினேதுவா ரடைந் துநிற்கு நிலைகூறப்பட்டது. என்று வருவனவற்றுற்காண்க. இப்பஞ்சாக்ஷரமானது, தூலம் சூக்குமம் அதிசூக்குமமென்ப தோடு காரண மகாகாரண மகாமநுவென்வும், பெயர்பெற்று விளங்கும். மந்திரங்களி னியல்புகளை நூல்வாயிலாகப் பெரி யோர்கள் மிகவும் தெளிவாய் நன்கு விளக்கிக்காட்டி யிருந்தபோ திலும் சற்குருவை வழிபட்டு அவர்முகமாகச் சந்தேகம் விபரீதம் நீங்க மந்திரங்களினது நுட்பங்களைக் கேட்டுத் தெளிந்து அநு ட்டிப்பவர்கள் பயனடைவார்கள். அல்லாதார் பயனடைய மாட் டார்கள். ஆதலான் மேற்கூறப்பட்ட மந்திரக்கிரமங்களைச் சற் குருவை வழிபட்டுணர்க. ஆனல் நூலுணர்ச்சியாற் பயனில்லை யோவெனின் அற்றன்று பின் என்னையெனின் குருவுபதே சம் திடப்படுவதாகிய உபகாரமே நூலாலுளதாம்பயன் என்ற றிக. இவ்வாறே ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சுப்பிரமணியர் பிரமதேவர் திருமான் முதலிய தேவர்களை யுணர்த்து மூலமந்திரார்த்தங்களி னுண்மையைச் சற்குருமுகமாகக் கேட்டுணர்க.

(இனியுட்பூஜையாம் மானசாராதனைக்கிரமம்.)—பூசாத்தானி மாகிய மனமென்னும் வீட்டின்கணுள்ள காமம், குரோதம், மோ கம், மதம், மார்ச்சர்யம், முதலிய துர்க்குணங்களென்னும் அசுத் தமாகிய குப்பைகளைத் தூரப்போக்கிப் (அதாவது பெருக்கி) பின்

னர் வாய்மையாகிய சாணத்தை அன்பாகிய சலத்திற் கரைத்து மேற்கண்ட இடத்தை மெழுகிச் சுத்தஞ்செய்து அதன் பின்னர் இறைவன் திருவுருவை மானசமாகத் தாபனம் செய்து அம்மன த்தின் கண்ணே கந்தம், மலர், தூபம், தீபம், திருமஞ்சனம், முதலியவற்றை கருதிக்கொண்டு புறப்பூசைசெய்யும் முறைமை யேபோலப் பூசிப்பதோடு, உயிர்க் கொலைசெய்யாமை, அருள், ஐம்பொறி, அடக்கல், பொறுமை, வாய்மை, அன்பு, அறிவு, என்னும், அட்டபுட்பங்கொன்டு உட்பூசை செய்தல்வேண்டும். இதனை அந்தரியாகம் எனக்கூறுவர். இவ்வந்தரியாகம் மிக்க பரிசுத்தமாயதும், சித்த சாதனமாயுள்ளதும், ஆமென்பர். இதை முறைப்படி, இயற்றினோர் சிவபெருமான் திருவருட்பேற்றிற் குரியராவர். இதனுண்மையைச் சிவஞானபோதம், சிவஞான சித்தியார், முதலிய ஞானநூல்களில் விரிவாய்க் கூறப்பட்டிருக் கிறது. ஆண்டுபோரக்கக்காண்க. மேற் கூறியபடி பூசாத்தானத்தி லுள்ள குப்பைகளைப் போக்கி மெழுகவேண்டுமென்பது முத லிய வற்றிற்குதாரணம்) சினமுதலியமயல், தீரமாற்றுபு—வினைதபு வாய்மையாமெழுக்கை யன்பெனும்—புனலிடைவிர வியே பூசினல்லது—மனமெனு மனையிடைவராது லிங்கமே என்று பிரபுலிங்கலீலையிற் கூறுமாற்றானும், அன்றி (இருதய நாப்பண் ஐந்தெழுத்துருவா மிறைவனையுயிர்க்கொலை செயாமை—அருள் பொறியடக்கல் பொறைதவம் வாய்மை யன்பறிவெ ன்னு மெண்மலர்கொண் — டொருமையோடருச்சித்திடுக,) வென்று மேலோரருளிச்செய்திருக்குந்திருவாக்காலும், அன்றி,

திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரம் தனித்திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

உடம்பெனுமனையகத்து ளுள்ளமேதகளியாக
மடம்படுமுணர்நெய்யட்டி யுயிரெனுந்திரிமயக்கி
யிடம்படுஞானத்தீயால் எரிகொளவிருந்துநோக்கிற்
கடம்பமர்காளைதாதை கழலடிகாணலாமே.

மெய்ம்மையாமுழவைச்செய்து விருப்பெனும்வித்தைவித்திப்
பொய்ம்மையாங்களையைவாங்கி பொறையெனுநீரைப்பாய்ச்சித்
தம்மையுநோக்கிக்கண்டு தகவெனும்வேலியிட்டுச்
செம்மைபுண்ணிற்பாராகிற் சிவகதிவிளையுமன்றே.

காயமேகோயிலாகக் கடிமனமடிமையாக
வாய்மையேதூய்மையாக மனமணியிலிங்கமாக
நேயமேநெய்யும்பாலா நிறையநீரமையவாட்டிப்
பூசனையீசனார்க்குப் போற்றவிகாட்டினோமே.

எனவருந் திருப்பாசுரங்களாலுமுணர்க.—இம்மானசபூசை யிற் சிறப்புற்றவர் அறுபான் மும்மை நாயன்மார்களுள் திருமயிலை வாயிலாநாயனர் முதலியோர்.

உ—ம் (பெரியபுராணம்.

மறவாமையானமைத்த மனக்கோயிலுள்ளிருத்தி
யுறவாதிதனையுணரு மொளிவிளக்குச்சுடரேற்றி
இறவாதவானந்தமெனுந் திருமஞ்சனமாட்டி
அறவாணர்க்கன்பென்னு மமுதமைத்தாச்சனைசெய்வார்.

எனவரும் திருப்பாடலா லுணர்க.

இனித் தத்துவமஸி என்னும் வேதாந்த மஹா வாக்கிய நிச்சயார்த்தங் கூறுதும். தத்துவமஸி என்னும் வாக்கியம்,

தத்—துவம்—அஸி எனப் பகுக்கப்பட்டு அது நீயாகின்றாய், என்னும் பொருளை யுணர்த்துதலால் இவ் வாக்கியமே பிறப் பிறக்கஞ்சி வீடடைய விரும்பு முத்தம சீலர்கள், தன்னையுந் தலைவனையு முணர்ந்து பின் றலைவனே டொற்றுமை யுறுதற்குரிய அத்துவித நிலையிற் கூட்டும். மெய்ஞ் ஞான மான மோனப் பண்பா முபதேச வாக்கிய மென் றுணர்க. ஷை வாக்கியம் தொம்பதம், தற்பதம், அஸிபதம் என மூவித மாகப் பகுத்துப் பொருள் கூறு முறைமையை யுடையதேயாம். அம்முறைமை எவ்வாறெனின், தொம்பத முக்கிய காரியோ பாதியென்னும் வியட்டி தூல சூக்கும காரண தேகாபிமானிக ளான விசுவதைசதப்பிராக்கியர்களைக்கொண்டு அனுபவிக்கும் சாக்கிர சொப்பன சுழுத்தி முதலான குற்றங்கள் நீங்கிய ஆன் மாவென்னுங் கூடஸ்தனாகிய சீவ துரியன், தற்பத முக்கியகார ணோபாதி யென்னும் சமட்டி தூல சூக்கும காரண தேகாபிமா னிகளான விராட்டு இரணிய கர்ப்பன் அந்தர்யாமிகளைக்கொண் டு அனுபவிக்கும் காரணோபாதி சம்பந்தமான துரியனாகிற பர சாக்கிரமும், மூன்றுபாதியோடு சம்பந்தமான காலபரமாகிற பர சொப்பனமும் ஏழுபாதிகளும் அடங்கி வாசனா சம்பந்தமான வியோமமென்னும் பர சுழுத்தியும் ஆகிய உபாதிகணீங்கிய, பிரமமே, அறிவே வடிவானபரன், சீவனதுகாரியோபாதி ஏழும் பரனது காரணோபாதி ஏழும் விட்டு நீங்கினேனென்னும் வாச னுபோத ஞானமே உபாதி ரகித சிவனுக்குடலாதலால் சிற்சொ லிதை யென்னும் அபிமானியைக்கொண்டு விளங்கும் விஸ்வக் கிராசமென்னும் சிவ சொப்பனமும் இவ்வாசனுவிழப்பபிமானி யாகிய பொற்புவி சாந்தத்தைக்கொண்டு விளங்கும் உபசாந்த மென்னும் சிவ சுழுத்தியும் ஆகிய உபாதிநீங்கிய சிவம். இங்ங னங்கூறிவந்த சீவ சுழுத்தியாகிய தமப் பிரதான காரணி யென்

னும் சீவப்பாழும், பரசுழுத்தியாகிய மோக காரணியென்னும் பரப்பாழும், சிவசுழுத்தியாகிய அமோக காரணி யென்னும் சிவப்பாழும், ஆகிய மூன்று பாழும் சீவதுரியம், பரதுரியம் சிவ துரியம் ஆகிய மூன்று துரியனுந் தோற்றுதற்கு நிலமாகவிருத்தலாற், இம் மூன்றையுங்கண்டு கழன்று விளங்கும், சிவதுரியமே சச்சிதாநந்த லக்ஷணத்திருக்கு வடிவாம் அந்த சுயம்பிரகாசத் திருக்கு வடிவமே நீயென்று உத்தமோத்தம அதிகாரிக்குச் சற்குருவராற் போதிக்கும், அதி சூக்கும ரகசிய மவுனோபதேச முறைமைத்தாமென் றுணர்க.

(விபரம்) தத்துவமசி மகா வாக்கியார்த்தத்தின்படி, தொம்பத முக்கிய வியட்டிகாரியோபாதியாவது, ஞானேந்திரியம்(5), சத்தாதிவிடயம்(5,) கன்மேந்திரியம்(5,) கன்மவிடயம் (5,) மனுதி அந்தக்காரணம்(4,) பிராணவாயு(1,) ஆகஉபாதிகள்(7.) இந்தஎழும் தூல முதலிய மூன்று தேகமாம். இதிற் சாக்கிர சொப்பன சுழுத்தியென மூன்றவஸ்தையாம். இவற்றிற்கு விஸ்வதைசதப்பிராக்கியனென்று அபிமானி மூன்றும். இவற்றில் சாக்கிரமாவது சிலந்திப் பூச்சிவலையாகாரமாய் நூலின்றச் செய்து அதினடுவே தானிருந்து சுற்றிலும் வரப்பட்ட பூச்சி புழுக்களைத் தாவிப் பிடித்துத் தான் உணவாகக் கொள்ளுதல் போல சீவனும் புருவம் நடுவே நின்று எழு பாதியாகிற வலை யாகாரத்திலே வந்து பொருந்துகிற விடய போகங்களைச் சென்று பற்றிப் புசிக்கும்போது விஸ்வாபிமானியைக் கொண்டு தூல தேகத்தை நடப்பிக்கிறது. இந்தச் சாக்கிரத்திலுள்ள எழுபாதியிற் றேகம்-1, இந்திரியங்கள்-1, ஆகஉபாதி யிரண்டு நிற்க. அந்தக்காரணம் 4, பிராணவாயு 1, ஆக ஐந்துபாதியோடு கண்டத்தானத்திலே நின்று சாக்கிரத்திலேறிய விடய வாசனை பூர்வ ஜன்மவாசனை முதலிய மனோபந்தனையாய் நின் றனுபவிக்கும்போது, தைசதவபிமானியைக்கொண்டு சூட்

சூக்ஷமதேகத்தை நடப்பிக்கிறது சொப்பனம். இந்தச் சொப்பனத்தில் மனம், புந்தி, அகங்காரம் மூன்று நிற்கச் சித்தம் பிராண வாயு, ஆக விரண்டு கருவிகளோடு இருதய கமலத்திலே நின்று வெறும்பாழை அநுபவிக்கும் பிராக்கிய வபிமானியைக்கொண்டு காரண தேகத்தை நடப்பிக்கிறது சுழுத்தி, இச் சுழுத்திக்கு மூலாங்காரமான தமப்பிரதான காரணியென்னு முதற்பாழுக்குச் சிவப்பாழென்று பெயர். இங்ஙனம் கூறியவைகளை யெல்லாங் கண்டு கழன்று நின்று விளங்கிய வறிவே தொம்பத லக்ஷியார்த்தமான சீவ துரியன், இந்தத் துரியன் தன்னைமறந்து சீவத்வம் வகித்து நின்ற பழக்க வாசனையினால் துரியம் விரிந்தாற் சாக்கிரமாயும் குவிந்தால் மாயா வியாத்தமாயும் காரணோபாதி பெந்திப்புடனே நானே பிரமமென்று அபிமானிக்கையால் பழையபடியே ஜனனமரணப்படுவன். ஆதலால் தற்பத முக்கிய சமட்டி ஈச்சுர காரணோபாதிகள் நீங்கவேண்டும். (அவ்வுபாதியாவது) சர்வஞ்ஞத்துவம் சர்வ காரணத்துவம், சர்வாந்தரியாமித்துவம், சர்வ சிருட்டித்துவம், சர்வ திதித்துவம், சர்வ சங்காரத்துவம், ஆக உபாதி ஏழு. இவை துரியம், காலபரம், வியோமமென மூன்றவஸ்தையாம். இவற்றிற்கு விராட் டிரணிய கர்ப்பன் அந்தர்யாமியென வபிமானி மூன்றும். இதிற் சாக்கிரமாவது முன்சொன்ன சீவதுரியமே பானுக்குடலாகையால், சர்வஞ்ஞத்வாதி காரணோபாதி பெந்திப்புடனே, விராட்டென்னுஞ் சமட்டி யபிமானியைக்கொண்டு வியட்டி தூலாபிமானியைப் பிரேரித்து நின்று விளங்குகிற துரியமே. பரசாக்கிரம். முற் கூறிய வுபாதிகளில் முறையே சர்வஞ்ஞத்வமாதி நாலு பாதிகள் நிற்க சர்வ சிருட்டித்துவ முதலிய மூன்று பாதிகளோடு இரணிய கர்ப்பனென்னும் சமட்டி யபிமானியைக்கொண்டு வியட்டி சூக்கும தேகாபிமானியைப் பிரேரித்து நின்று விளங்குகிற கால பரமே பர சொப்பனம், இனிக் காரண வுபாதிகள் ஏழு நீங்கி வாசனைபெ

ந்தமாய் அந்தரியாமி யென்னுஞ்சமட்டி யபிமானியைக்கொண்டு வியட்டி தேகாபிமானியைப் பிரேரித்து நின்று விளங்குகிற வியோமமே பரசுழுத்தி இதற்கு மஹா தத்துவமான மோககாரணியென்னும் இரண்டாம் பாழான பரப்பாழென்று பெயர். இங்ஙனம சொல்லிவந்த உபாதி அவத்தை யபிமானிகளை யெல்லாங்கண்டு கழன்று நின்று விளங்கிய வறிவே தற்பத லக்ஷியார்த்தமான பரதுரியன். இந்தத் துரியனுன பரன்மேற் கூறிய காரணோபாதிகளுக்கு உற்பன்ன சத்தியான துரியாதீத வுடலையெடுத்து உபாதிகள் நீங்கினேமென்னும் வாசனுதோடத்தோடு யானென்னு மமதையிருத்தலால் இவற்றிவ் வாசனுதோஷ மமதைகள் நீங்கிச் சிவமாகவேண்டும் ஆதலால் அசிபத சோதனை செய்யவேண்டும். (இதற்குதாரணம் திருமந்திரம்) பண்டைமறைகள் பரமனுடலெனுந்—துண்டமதியோன் றுரியாதீதந்தனைக்—கண்டபரனுங் காரணோபாதிக்கே — மிண்டினவன்சுத்தனுகான் வினவிலே, என்பதனுற் காண்க இனி அசிபத முக்கியமாவது, மேற்கூறிய பரதுரியன் துரியாதீத சிவத்துக்குடலாய் அதிற் சிவ சாக்கிரம், சிவ சொப்பனம், சிவசுழுத்தியென மூன்றவஸ்தையாம். இவற்றுட் சிவ சாக்கிரமாவது சிற்சொலிதையென்கிற வபிமானியைக்கொண்டு காரியகாரண வுபாதிகள் விட்டு நீங்கினே மென்னும் வாசனுபோத ஞானமே சிவ சாக்கிரம். இனிச் சிவ சொப்பனமாவது) பிரசாபத்தியனென்கிற வபிமானியைக்கொண்டு சீவேசுர ஜெகத்தென்பதொன்றுந் தோன்றுதெல்லாந் தன்மயமாகவிளங்குகிற விஸ்வக்கிராசமே சிவ சொப்பனம். (இனிச் சிவ சுழுத்தியாவது) பொற்புவிசாந்த னென்கிற வபிமானியைக்கொண்டுமுற்கூறிய சீவசாக்கிராதிமூன்று, துரியனென்று காலபரமொன்று வியோமமொன்று. பரமொன்று, விஸ்வக்கிராசமொன்று ஆக வெட்டுந்தோன்றுமல் சீவ சுழுத்தியான மூலாங்காரமென்னும் தமப்பிரமான

காரணி, பரசுழுத்தியான மஹா தத்துவமென்னும், மோககாரணி, இந்த விரண்டு மடங்கி அமோக காரணி சொரூபமாய் மகா மாயை யாகிற, மூலாஞ்ஞானமாய் நின்று விளங்குகிற உபசாந்தமே சிவ சுழுத்தி (இதற்குச் சிவப்பாழான மூன்றும் பாழென்று பெயர். உ-ம்) (திருமந்திரம்) காரியமே ழுங் காந்திடுமாயையுட் — காரணமேழுங் காக்குங்கடுவெளி— காரியகாரண வாதனையற்றவப் — பாரணமும்முப சாந்தப்பரிசதே என்பதனு லுணர்க. இங்ஙனம் புகன்ற மூன்றுபாழினும் மூன்று மாயை யிருப்பிடமாம். இம் மூன்று மாயாசத்திக்கும் வித்து. உபசாந்தமாம். இம் மாயாசத்திக ளெம்மட்டுணடோ அம் ட்டும் பிறப்பைக் கொடுக்கும் என்பர். சத்திக்கு வித்து உபசாந்தமென்பதற் குதாரணம் (திருமந்திரம்) பத்திக்கு வித்து பணிந்துற்றுப் போற்றலே — முத்திககு வித்து முதல்வன்றன் பாதமே — சித்திக்கு வித்துச் சிவபாங்சானுதல் — சத்திக்கு வித்துத் தனதுபசாந்தமே, என்பதனுற் காண்க. ஆதலா லிவைக ளெல்லாங் கண்டு கழன்று நின்று பிரகாசாந்தா வபேக்ஷையின்றி விளங்கும் அறிவே சிவதுரியமென்னு சச்சிதாநந்த லக்ஷணதிருக்காகிய சிவம் என்றுணர்க. (உ-ம் திருமந்திரம்) ஒழியாவுபசாந்தமதாயுளதும்— கழியாவிடு காரியகாரணமே — மொழியாவிடு மூவுலகற்றவிடத் — தழியாவுணர்வே சிவமானதுவே. என்பதனுற் காண்க. இந்தச் சிவ துரியன் சிற்சொலிதை பிரசாபத்தியன் பொற்புவிசாந்தன் ஆகிய மகா வபிமானிகளாய் வாசனு வுபாதிகளோடுங் கூடினபோது அசிபத முக்கியார்த்தனென்றும், இவைகளை விட்டு நீங்கினபோது அசிபத லக்ஷியார்த்தனென்றும், அவற்குப் பெயராமென்றும், ஒருவன் மூன்று தேதேசத்தில் மூன்று பெரும் மூன்று வேடமுமாக விருந்து அவனூரும் பேரும் வேடமும்போக மூன்றிடத்தினு மிருந்தவன் ஒருவனேயானாற்போல் சீவதுரியன், பாதுரியன், சிவதுரியன்

ஆகிய மூன்று துரியனு மொருவனேயாமென்றும். அஃதெங்ஙனமெனில் மேற்கூறிய உபாதிகள் தீர்ந்தவிடத்தி லொன்றேயாமென்றும், மூன்று பாழான மூன்று மாயையுமில்லாவிடத்தில் மூன்றுவிதமான துரியனு மில்லாம லொன்ருய்த்திருக்கு சொரூபமான சித்தாம், என்றும். இவை முன் சொல்லிய மாயாதிரிசியத்தாலே மூன்று துரியனுயின வென்றும், இத் துரியனுகிய சித்துப்போதங்கள் நீங்கிய விடத்து ஆனந்தமாமப்போது இம் மூன்றுருவுந் தோன்ருமல், எல்லா மானந்தமா யுடம்டமுதலிய வெல்லாமறந் தவ் வானந்தத்திற் கரைந்து, எல்லா மாநந்தமயமாய் விளங்கு மென்றும், சீவன் முத்தி யதீதத்தில் பாமுத்தியபசாந்தத்தில் சிவ முத்தி யானந்தத்தில் இந்த மூன்றிடத்திலும் முத்தியான மூன்று துரியனுக்கும் அப்பாலாயிருக்கிற வாநந்தத் திற்குங் கோவைப்படுத்தின மணிகழலச் சரடொன்றமே விஞ்சி நின்ருற்போல நின்றது, சத்து என்றும் இந்த சத்து, சித்து, ஆனந்தமான திருக்கு சொரூபமே ஆத்மாவாகிய நீயென்று சற்குருவானவர் உத்தமோத்தம அதிகாரியாகும் பக்குவ சீலர்க்குப் போதிக்கு மியல்புடையதெனப் பெரியோர் புகன்றிருக்கின்றனர். உதாரணம். (தத்துவரத்நாகரம்) சீவன்றன்முத்தி யதீதம் பரமுத்தியோதுபசாந்தம் சிவமுத்தி யானந்தம் — மூவயின் முசசொரூப முத்தியு முப்பாலேவுறு தாரத்தினுள்ளுணர்வானதே — எ-ம். மெய்ம்மொழி – மத்தமாம்புலன் மாறியவிடத்தே மன்னுயிர் வெளிப்படுமதுபோய்ப் — பெத்தமாமுயிர்மாறியவிடத்தே பெரியநற்பரம் வெளிப்படுமதுபோய் — அத்தமாம் பர மாறியவிடத்தே யமலநற்சிவம் வெளிப்படுமதுபோய்ச் — சுத்தமாஞ்சிவ மாறியவிடத்தே தோனற்டும் சுயம்பிரகாசம். எ-ம். மற்றும் வருவனவற்றுற்காண்க.

இவ்வாறன்றி மேற்கூறிய மா வாக்யெத்திற்குத் தத்தஞ் சம்பிரதாயத்திற்கியைய வெவ்வேறு பொருள் கூறுவாறு முளர். ஆதலா லெவ்வெவ ரெப்படிக் கூறினு மிவவுண்மை மல பரிபாகங் காரணமாய்த் தோன்றும் பேரன்புடையாருக்கு, எல்லாம் வல்ல விறைவன் பெருங் கருணையினாற் குருமூர்த்தங்கொண் டெழுந்தருளி உபதேசிக்கும் ஞானோபதேச வாயிலாகத் தெரிந்து தெளிந்து நிட்டைகூடி இன்புற்றுய்வ தன்றிப் பிற எவ்வாற்றானு முண்மையுணர்ந் துய்வது அரிதரிது, என்றுணர்க. மஹா வாக்கியார்த்த வுண்மை விளங்க வுபதேசிப்பவர் கடவுளே என்பதற் குதாரணம். (ஸ்ரீ தாயுமான சுவாமிகள்) அவனே பரமு மவனே குருவு — மவனே யகிலமனைத்து—மவனேதா—மானவரே சொன்னா லவரே குருவெனக்கு — நானவனாய்நிற்ப தெந்நாள், எனவு மற்றும் வருவனவற்றாற் காண்க. அற்றேல் மகா வாக்கியார்த்த விஷயமாய் இதுகாறுங் கூறியவாற்றால் நாம் தெரிந்துகொள்ளற்பாலது யாதெனின், சமயவாதிகள் பலதிறத்தர் பலவாறு பொருள் கூறினும் மெய்புணர்ந்த ஞானிகள் யாவரும் தன்னை யறிவுருவென் றுணர்தலே மகாவாக்கியத்தின் பொருளென்று தாங்க ளருளிச்செய்திருக்கும் நூல் வாயிலாக விளக்கிக்காட்டி யிருக்கின்றனர். ஆதலால் சகல கேவலாவஸ்தைகளை நீக்கி அறிவருவாகிய தன்னையறிவாலறிவதே வேதாந்த மஹா வாக்கிய நிச்சயார்த்தமென்றறிக. இவ்வா றுணராவிடின் பிற எல்லா முணர்ந்தும் பயனில்லை (இதற்குதாரணம்) திருமந்திரம். எல்லா மறியும் அறிவுதனைவிட்டு — எல்லாம் அறிந்து மிலாபமங்கில்லை -- எல்லாம் அறியு மறிவினை நாமென்னில் — எல்லாம் அறிந்த விறைவனுமாமே. என்பதனாற் காண்க. ஆகவே மாயா காரியமாகிய போகங்களிலுள்ள விருப்பத்தையும் ஜடப்பிணமாகிய தேகத்தை நானென்றபிமானிக்கும்

மனோபாவத்தையும் துவித புத்தியையும்ஒழித்துச் சிவோகமென அத்துவித பாவனை செய்வதேதகுதியாம். இதற்குதாரணம் சிவ ஞானபோதம். நானவனென்றெண்ணினர்க்கு நாடுமுளமுண் டாதல்—தானெனவொன் றின்றியே தானதுவாய் — நானெனவொன்— றில்லென்றுதானே யெனுமவரைத் தன்னடிவைத் — தில்லென்று தானுமிறை— என்பதனாற் காண்க.

(ஈண்டோர் அதிரகசிய விவேகம்)—ஓர் சந்தர்ப்பத்தில் நற்றாயானவள் தன் முலைப்பாலைத் தன் சிசு வுண்ணாதிருக்கும் பொருட்டுத் தன் கொங்கையில் வேப்பெண்ணை முதலிய கசப்பு வஸ்துக்களைத்தடவுகிற துலகத்திற் பிரசித்தம் அதுபோல மெய்யுணர்ச்சியுடைய பெரியாரும் கருணையினாற்றாங்க ளருளிச்செய்திருக்கும் ஞான நூல்களில் மந்தாதிகாரிகளின் பொருட்டுச் சில நியாயங்கள் புகன்றிருக்கின்றனர் அவைகளை முக்கியவதிகாரிகளாயுள்ள அன்பர்கள் திருவருளை முன்னிட்டுத் துணர்வார்களாயின் உண்மைப்பொருள் வெளிப்படும். பெரியாரவ்வாறு கூறுதல் எற்றுக்கெனின் மந்தமதியுடையானுக்கு முக்கியார்த்தத்தைக்கூறின், அவனதனையுள்ளவாறுணரும் புத்திவலியிலனாதலின் சர்வ அனர்த்தத்துக்கும் காரணமான விபரீதவுணர்ச்சியுடையனாய்க் கெட்டுப்போவான். ஆதலால் லவ்வாறருளிச் செய்திருக்கின்றனரென் றுணர்க. அபக்குவர்க்குண்மைப் பொருளை யுபதேசித்தாற் றீங்காம் என்பதற் குதாரணம்.—(ஞானவாசிட்டம்) இயற்கைகுணஞ் சோதித்து முன்னே பின்னே யென்னுஞ் செய்யுளாலும் ஒழிவிலொடுக்கம்.) குரங்கை நினையாதிருவென்று கூற வென்னும் வெண்பாவாலும் காண்க. இனிச் சற்குருமுகமாக வேதாந்த மஹா வாக்கியார்த்தத்தைக் கேட்டுணர்ந்து தெளிந்து நிட்டையுற்றுப் பயனடைய வேண்டுமென்பதனையும்இந்நிலை யுறுதலரி தென்பதனையு மிவ்வாறறின்

வாக்கு மாத்திர வேதாந்தத்தாற்பரனின் றென்பதினையும் அடி
யிற்கண்ட சரிதங்களாலும் பெரியாரருளிச் செய்திருக்கு முப
தேசச் செய்யுள்களாலுமுணர்க.—(பிரபுலிங்கலீலை கோரக்கர்
கதி) என்று தனதியலுணர்த்தி யுடம்பு நானென்றிருந்த வியல்பு
போல நின்ற வெனையுணர்ந்து நீ சோகம் பாவனைகொண்டு நிற்
பையாயிற்—பொன்றலுறு விடங்கலுழன்றனை நினைப்பப்போ
தல் போற்போமவிச்சை—நன்றறிதியென வறிவித்தனனெங்
கோன் கோரக்கநாதன் றன்னை. ஞானகுருப ரனருளாற்றனக்
குரைத்த மொழிப்பொருளை நன்றறிந்திட்—டேனவடிவென்பது
விட்டுண்மையலாவனைத்தையு நீத்துண்மைகண்டு—தானதனை
யடைந்து தானது வென்னு மருளகன்று தானேயாகி—வானவ
ரு மறிவரிய பெரும்புகழ்க்கோரக் கனவண் மன்னினனால்.
எ—ம் ஷெ—(கதலிவனகதி) பூதநீயலை பொறிகளுமலையலை
புந்தி—யேதுநீயலை யிவற்றினை மயங்கியானெனனும்—போத
நீயலையென்றிவையனைத்தையும் போக்கி—சோதியாகிய பிரம
மே நீ யெனச்சொல்லி. எ—ம் (அன்னைநீயினிக்கதலி மாவ
னத்தினையடைந்திட்—டென்னைமேவினைகேட்ட விப்பொருளி
னையெல்லா—நின்னினீதெளிந்துறுதிகொணி தித்தியாசனத்தி
ன்—மன்னுவாயெனவேவினன்றற் கொடைவள்ளல்.) எ—ம்,
இனியவாழையங்காடு—என்றபாட்டில், தனியளாயொருபுறம்ப
சந்துள சிவைதரு—செங்கனியவாவியவுள்ள மோடிருந்தனள்
களித்து எ—ம்.—(ஸ்ரீ தாயுமானசுவாமிகள்) பாராதி பூதநீ
யல்லையுன்னிப் பாரிந்திரியங்கரண நீயல்லை—யாராயறிவு நீ
யென்றுனையனன் பாயுரைத்தசொல் லானந்தந்தோழி, எ—ம்.
அன்றென்று மாமென்று முண்டோவுனக் கானந்தம் வேண்டி
னறிவாகிச் சற்றே—நின்றுற்றெரியுமெனவே மறைநீதியெம்
மாதிநிகழ்த்தினான்தோழி, எ—ம்.—(ஸ்ரீ தத்துவராயசுவாமிகள்)

நான்மறையோதிப் பொருளுரைத்தே நாடறியக்கல்வி சாற்றினு லுந்—தானதுவாகை யரிது காணுஞ் சலிப்பற நிற்கையரில் காணும் எ—ம்—(எல்லையிலாகமமேற வோதியேதுக்களோகி லாமியம்பினுலும் அல்லலறக்கை யரிதுகாணும்— அறிதுள நிற்கையரிதுகாணும் எ—ம்—(இணங்காமையெல்லா மறத்து றந்தே யிருட்டற வேதாந்த மோதினுலும்—பிணங்காதிருக்கை யரிது காணும் பேரின்பமாகை யரிதுகாணும். எ—ம். மற் றும் வருவனவற்றுற்காணகை. இந் நூலுக்குச் சத்திய சன்மார்க் கப் பிரகாசிகை யெனப் பெயரிட்ட தென்னை யெனி லஃதிவ் வியல்பிற்றென்று முதற்பாகத்திலொருவாறு விளக்கியிருக்கின் றேம். இன்னு மதனைச் செவ்விதிற் றெளியும் வண்ணம் பிறி தோராற்று லீண்டும் சிறிது விளக்கிக்காட்டுதும் என்னை, கர்மா நுட்டானக் கிரமங்களைக் கூறும் அற்பச் சுருதி வாக்கியம்போல் வதன்றி, அத்தியான்மக ஞானத்தைப் போதிக்கும் பிரபலச்சுரு தி வாக்கியத்தின் பொருளைப் புகல்கின்றமையாலும் அன்றி, உலகத்துட் பல சமயாசிரியர்களாலும் பிறராலும் ஒன்றற்கொ ன்று மாறுகக் கூறப்பட்டுள்ள சமய மார்க்கங்கள்போல்வதன் றென்பது தோன்றவும், சன்மார்க்கமென்று கூறப்பட்டது. இனிப் பிரகாசிகை யென்றதெற்றிற்கெனின், பொய்ப்பால மெய்ப்பாலபோல் மேற்கொள்ளப்பட்டும் மெய்ப்பால பொய்ப் பாலபோற் கைவிடப்பட்டும், (அவை யாவன) பொய்யை மெய்யெனவும், மெய்யைப் பொய்யெனவும், விபரீதமாக வுணருந் தன்மை) அஞ்ஞான விருளின் மயங்கிக்கிடக்கு மாந்தர்கள் உண்மையிற்றென் றுணர்ந்து துணியும்படி உண் மைப்பொருளை விளக்குங் காரணத்தாலும், அன்றிப்பல நூல்க ளில் இலை மறை காய்கள்போற் பலவிடங்களிலும் வெளிப்படா திருந்த உண்மைப் பொருள்களை யெல்லாம் ஒருங்கே திரட்டித்

தொகுத்தும் வகுத்தும் பக்குவர்களுக்கு விளக்கிக்காட்டுங் காரணத்தாலும், பிரகாசிகை யென்று புகலப்பட்டது. அற்றேல், சன்மார்க்கப் பிரகாசிகையென்று கூறியதேசாலும், சத்தியமென்றோரடைமொழி கொடுத்த தெற்றுக்கெனின், தற்காலம் நவீனமாகவுள்ள சில மதாந்தர நூல்களின் சம்பந்தமான புத்தகங்கள் முதலியவற்றிற் சன்மார்க்கமென்னும் பெயரைத் தலைப்பிற் குறிக்கப்பட்டிருக்கும் போலிச் சன்மார்க்கங்கள்போல் வதன்றென்பதைக் காட்டும் பொருட்டு, உண்மை என்ற பொருளைத் தெரிவிக்கும் சத்தியம் என்ற சொல்லை அடைமொழியாக அமைக்கப்பட்டதென்றுணர்க. இனிச்சத்திய சன்மார்க்கப் பிரகாசிகை யென்னுந் தொடர்மொழி விரியுமிடத்து, உண்மையாகிய சன்மார்க்கத்தை விளக்கிக்காட்டும் நூல் எனவும், அல்லது, உண்மையாகிய ஞானநெறியைப் பிரகாசப்படுத்து நூல், எனவும் விரியும், அன்றி ச்,சத்மார்க்கமென்பது, சன்மார்க்கம் என நின்றமையால், சத்தாகிய எல்லாம் வல்லவிறைவனியல்பு முதலியவற்றைப் போதிக்கு மார்க்கமெனவும், அன்றிப்பக்குவமுள்ள சீவான்மாக்களைச், சத்தோடிரண்டறக் கூட்டு மார்க்கமெனவும், அன்றி எக்காலத்தும அழியாநிலையிற் பக்குவசீலரைச் சேர்ப்பிக்கு மார்க்கம் என்றும்பொருள் கொள்ளப்படும். ஆதலால், பொய்யின்பகுதியிற்பட்டவை யெல்லாம் பொய்யே யாகப்போகவும், மெய்யின்பகுதியிற்பட்டவை யெல்லாம், மெய்யேயாய் விளங்கவும் நன்மக்களுக்குணர்த்தும் காரணத்தால் இதுவே சத்திய சன்மார்க்கப் பிரகாசிகை யாமென்று கூறப்பட்டது. ஆகவே யிச்சத்திய சன்மார்க்க நிலையே உண்மை முத்தியையளிக்கு நிலை யென்றுணர்க. சன்மார்க்கமாகிய ஞான நெறியே இறைவன் றிருவடியிலிரண்டறக்கூட்டு நெறியா மென்பதற் குதாரணம் (சிவஞான சித்தியார்) சன்மார்க்கஞ் சகலகலை

புராண மென்னுந் திருவிருத்தத்தாற் காண்க. அற்றேற் கர்மா நுட்டானக் கிரமங்களை யுணர்த்தும் சுருதியாற் பயனின்றோ வெனின், அற்றன்று, மற்றென்னையெனிற் சன்மார்க்கத்துக்கு ஏனைய மார்க்கங்களெல்லாம் சோபான மார்க்கங்களாம் அச்சோ பான மார்க்கத்திற் சென்றன்றி, இச் சன்மார்க்க நெறி சித்தித்த லரிதாகும். அஃதென்போலவெனின் அரும்பின்றி மலரும் மலரின்றிக் காயும் காயின்றிக் கனியும் உண்டாகுதலரிதாந் தன் மைபோலென்றறிக. ஆதலான் முன்னர் அரும்புண்டாகி அது முற்றிப் பின் மலராய்ப் பின்காயாய்ப்பினது முற்றிக் கனியா குதல் யாவருக்கும் பிரத்தியக்ஷமேயாம். இதனுற்றான் ஸ்ரீ தாயு மான சுவாமிகளும், விரும்புஞ்சரிதை முதன் மெய்ஞ்ஞான நான்கும்—அரும்புமலர் காய்கனிபோலன்றோபராபரமே யென் றருளிச்செய்திருக்கின்றனர். இப்படியே, ஒன்றேடொன் றொவ்வாத சார்வாக முதலிய பலசமய மார்க்கங்களும் இச் சன் மார்க்கத்துக்குச் சோபான மார்க்கங்களேயாமென்பது தோன்ற மேலே ஏனைமார்க்கங்களெல்லா மென்றனம். இக்கூற்று முர ணுகாதோவெனின், ஆகா, என்னை, சீவான்மாக்கள்து அதிகார பேதம்பற்றி முன்னர் அதி தாமதர்களாய் மந்தமதிகளாய் லௌ கிக சுகத்தையே பரம புருடார்த்தமெனவும் புறமாகிய புத்திரர்க ளையே ஆன்மாவெனவும் அபிமாணிக்கும் அதிகாரிகளைக் குறித் து லௌகிக சுகம் பரம புருடார்த்த மன்றெனவும் புத்திரர்கள் ஆன்மாவல்லவெனவும் உணர்த்தி அவர்கணுண்பொருளுணரும் வன்மையிலராதலாற் றூல தேகத்தையே ஆன்மா வென்றும் அதனழிவையே பரம புருடார்த்த மென்றும் கூறிப்பின்பு— தேகாதிகளி லேற்றியவான் மத்தன்மையை மறுத்தற்குப் புத்தர் சாத்திரங்கூறிப் பின்னர், இவ்வாறே மேலுஞ் சோபானக் கிரம மாகச் சுருதிகள் கூறுகின்றமையால் விரோதமின்மைதெளிக

ஆகவே இப்போ துலகத்தி லேற்பட்டிருக்கும் சமஸ்த மதங்களு ம் இனிமேலேற்படும், நவீன மதங்களும் இச் சத்திய சன்மார் க்கத்துக்குச் சோபான மார்க்கங்களாமென் றுணர்க. நன்னெறி, சன்மார்க்க மென்பன—ஒரு பொருட்கிளவியே யாம்.

நூற்பயன்.

கலையெலா முணர்ந்தார்போன்று, கசடறத் தெளிந்தார் போன்று— அலகிலா றறிவோர் போன்று றறமலா மறிந்தார் போன்று—பலபல சமயத்தார்கள் பகர்ந்த நூன் மயக்கமெல்லா ம்—விலகிடுமிந் நூனன்கு விரும்பி யாராய் வோர்க்கெல்லாம்.

சாதன நான்குள்ளோர்க்குச் சற்குருவின் றிருவருளாற் சாற்றுமிந்நூல்—ஓதியுணர்ந் தோரிறைவன் றிருவருளா லிச்ச கத்திலுள்ளபேத—வாதிகளாற் புகன்றிடுநூன் மயக்கமுறுதெஞ் ஞான்று மௌனவாழ்வுற்—றேதமறு முத்தியினை யெய்திடு வரிப்பிறப்பி லெளிதின்மாதோ.

பரம சற்குரு நாதன் பதமலர் வாழ்க.

இந்நூல் வசனநடையி லியற்றியதற்கு முக்கிய காரணம்.

பிணிமூப்புப் பிறப்பிறப்பிற்கஞ்சி முத்தியடைய விருப்ப முள்ள பரிபக்குவ சீலர்களாகிய அன்பர்கள்; தெளிவுபெறாது மீளமீள மயங்குதற் கேதுவாகிய சமயவாத நெறிகளிற் சென்றி டர்படாது, தெளிவுறுதற்கேதுவாகிய சமநிலை யடைந்தின்புறப் பொய்தீர்நிலை, நிற்கு நன்னிலை, அருணிலை, மதாதீத நிலை,மோ ன சமாசநிலை என்று அறிஞர்களாற் புகழப்பட்டிருக்கும் உண் மை நிலையை எளிதினுணர்ந்த நுட்டித்தருட் பெருவாழ்வடைய வோர் நூல் இயற்ற வேண்டுமென்று, மஹா கனம் பொருந்திய இராமநாதபுரம், ஸ்ரீ பாஸ்கர சேதுபதி மஹாராஜா அவர்கள் முதலிய மெய்யன்பர்கள் தமியேனை வேண்டிக் கொண்டமை யால் அது முற்றுப் பெறுவதற்கு. எல்லா வல்லவிறைவனைப்

பல்கார் சிந்தித்துத் துதித்து வணங்கி அவ்விறைவன் றிருவருட் சகாயத்தாற் பஞ்சரசமஞ்சரி, சதுர்வித புருடார்த்த சங்கிரகம் என்னும் நூல்களியற்றி அச்சிற் பதிப்பித் தன்பர்களுக்கு விலையின்றி யளிக்கப்பட்டன. மேற்கண்ட நூல்கள் செய்யுணடையா யிருத்தலாற் சிலர்க்கு மாத்திரம் பயன்படுந் தன்மையுடையவாருயின ஆதலாற் பெரியோர்கள் அருளிச் செய்திருக்கும் ஞான சாஸ்திரங்களின் அர்த்த சாரங்களனைத்தும் அன்பர்களனைவர்க்கும் ஞாபக மாதற் பொருட்டுப் பெரியோ ரருளிச்செய் திருக்கும் பொருட் பிரயோகமேயன்றி அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய சொற் பிரயோகங்களையுஞ் சிர மேற்கொண்டு அவர்கள் திருமலர்ப் பாததூளி மகிமையாலும், எல்லாம் வல்ல நம் மிறைவன்து திருவருட் சகாயத்தாலும், சத்திய சன்மார்க்கப் பிரகாசிகையென்னு மிந்நூன் மூன்று பாகங்களாக வசன நடையில் இயற்றினும். இவற்றுண் முதற்பாகமாகிய புஸ்தகங்கள், நிகழும் நளஞு ஆவணிமீ 26உ 10—9—16 ஆதிவாரம், சென்னை சிக்கென்டரி ஸ்க்கூலிற் கூடிய மஹாசபையில் அக்கிராசனம் வகித்திருந்த, மாட்சிமைதங்கிய ஐக்கோர்ட் ஜட்ஜியாராகிய ம—ா—ா—ஸ்ரீ சதாசிவஐயரவர்கள் சமுகத்தில் அங்ஙனம் வந்திருந்த அன்பர்கள் யாவருக்கும் அளிக்கப்பட்டன மற்றைய இரண்டாம் பாகம், மூன்றும்பாகங்களாகிய புஸ்தகங்கள் சன்மார்க்க வநுட்டானமுள்ள அன்பர்களுக்கு விலையின்றிக் கொடுக்கப்படுமென்றறிக.

இனிச் செம்மனச் செல்வர்கள் நம்மனோருய்யும்படி அருளிச் செய்திருக்கும் அற்புதத் தோத்திரங்களுட் சகல கேவலா வஸ்தைகளின் பகுதிப்பாற்பட்ட சமயங்களாகிய பன்மார்க்கங்கள் தீதென்றுணர்த்திச் சன்மார்க்கத்தினுயர்வையும் திருவருளால் உண்மை ஞான வுபதேசக்கிரம மாயறிய வேண்டு

மியல்களையும் புலப்படுத்துந் தோத்திரங்கள் முதலியவற்றை அடியிற்காண்க.

ஸ்ரீ அருணகிரிநாதர் திருவாய்மலர்ந்தருளிய திருப்புகழ்.

கருமமான பிறப்பற வோர்கதி, காணுதெய்த்துத் தடுமாறுங், கலககாரண துர்க்குண சமயிகள் நாலுவர்க்கக் கலைமேவி— வரு மனேக விகற்ப விபரித மனோபாவத்துக் கரிதாகு, மவுன பூரித சிற்குணவடிவினை மாயாமற்குப் புரிவாயே. (எனவும்.) புகரில் சேவல தந்து ரசங்க்ரம, என்ற திருப்பாட்டில், அகில வாதிகளுஞ் சமயங்களுமறியலாமென வன்றென நின்றதை யடியனே னறியும்படி யின்றருள் புரிவாயே எனவும்) உததி யிடை கடவு மரகத வருண என்ற திருப்பாட்டில்) உரு வென வும் அரு வெனவும் உள தெனவு மில தெனவு முழலுவன பர சமயகலை யாரவாரமற— வுரையவிழ வுணர்வவிழ வுளமவிழ வுயிரவிழ வுளபடியை யுணருமவ ரனுபூதியானதுவும். எனவும்,) பாணிக் குட்படாது சாதகர் காணச்சற்றொணாது வாதிகள் பாசிக் கத் தகாது பாதக பஞ்சபூத, பாசத்திற்படாது வேறொருபாயத் திற் புகாது பாவனை பாவிக்கப்பெறாது வாதனை நெஞ்சமான— ஏணிக்கெட்டோணுது மீதுயர் சேணுக்குச்சமான நூல் வழியே றிப்பற்றொணாது நாடினர் தங்களாலு மேதுச் செப்பொணுத தோர் பொருள். (எனவும்) மக்கட்குக்கூறரிதானது கற்றெட்ட த்தான் முடியாதது மற்றொருப்புக்கியாது மொவ்வாதது மனதாலே மட்டிட்டுத்தேட வொணாதது தத்துவத்திற் கோவை படாதது மத்தப் பொற்போதுபகீரதிமதி சூடும், முக்கட் பொற்பாளரு சாவிய வித்தைக்குப் போதகமானது முத்திக்குக் காரணமானது பிரமாவும், முட்டற் கெட்டாதது மாமறை யெட்டிற் றெட்டா வெனவேவரும். எனவும். (கந்தரலங்காரம்) ஒளியில் விளைந்த வுயர் ஞான பூதரத்துச்சியின்மே — லளியில் விளைந்த தோ

ரானந்தத்தேனை, யாதியிலே — வெளியில் விளைந்த வெறும் பாழைப்பெற்ற வெறுந் தனியைத்—தெளிய விளம்பிய வாமுக மாறுடைத் தேசிகனே. எனவும்) தொண்டர் கண்டண்டி மொண்டுண்டிருக்குஞ் சுத்த ஞான மென்னுந்—தண்டையம் புண்டரிகந் தருவாயென வும் வரையற்ற வுணர்சிரமற்று வாரி திவற்றச்செய்த—புரையற்ற வேலவன் போதித்தவாவெனவும்) மற்றும் வருந்திருப்பாடல்கள் முதலியவற்றானும் காண்க.

இனி, ஸ்ரீ தாயுமானசுவாமிகளருளிய திருப்பாடல்கள். அந்தோ வீததிசய மென்ற திருப்பாட்டில் சந்தான கற்பகம் போலருளைக்காட்டத் தக்கநெறியிந் நெறியேதான் சன்மார்க்கம், எனவும்) காலமொடு தேச வர்த்தமான மாதிகலந்து நின்ற நிலை வாழிகருணைவாழி—மாலறவுஞ்சைவமுதன்மதங்களாகி மதாதீத மான வருண்மரபுவாழி, எனவும்) பாவியேனினியென்செய் கேன் பரமனே, என்ற திருப்பாடலில், சாவிபோஞ் சமயத் தூடு சகத்திடை தவிக்கின்றேனே. எனவும்.) தெரிவாகவூர் வன நடப்பன பறப்பன செயற்கொண் டிருப்பனமுதற், றேகங் களத்தனையு மோகங்கொள் பௌதிகஞ் சென்மித்த வாங்கிறக் கும் விரிவாய பூதங்களொன்றொ டொன்றாயழியு மேற்கொண்ட சேடமதுவே வெறுவெளி நிராலம்பநிறை சூன்ய வுபசாந்த வேத வேதாந்த ஞானம்—பிரியாத பேரொளிபிறக்கின்ற வரு ளருள் பெற்றோர்கள் பெற்ற பெருமை பிறவாமை யென்றைக் கு மிற வாமையாய் வந்து பேசாமை யாகு மெனவே—பரிவா யெனக்கு நீ யறிவிக்க வந்ததே பரிபாககாலமலவோ. எனவும்) பொருந்து சகமனைத்தினையும் பொய் பொய்யென்றே புகன்ற படி மெய்யென்றே போதரூபத்—திருந்தபடி யென் றிருப்பதன் றே யன்றோ யெம்பெருமானியான் கவலை யெய்தாக்காலம். எனவும்) சித்துஞ் சடமுஞ் சிவத்தைவிட வில்லையென்ற—

நித்தன் பரமகுரு நேயத்தாற்—சுத்தநிலை—பெற்றேமேநெஞ்சே பெரும்பிற விசாராமே கற்றேமே மோனக்கரு. (எனவும்) பாராதியண்டமெலாம் படர்கானற் சலம்போற் பார்த்தனையே முடிவினின்று பாரெது தானின்ற—தாராலு மறியாத சத்தன்றோ வதுவாயங்கிரு நீ யேங்கிருந்து மதுவாவைகண்டாய். எனவும்) நானெனவு நீ யெனவு மிருதன்மை நாடாம, னடுவே சும்மா, தானமரு நிலையிதுவே சத்தியஞ் சத்தியமெனநீ தமியனேற்கு—மோனகுரு வாகியுங் கைகாட்டினை. எனவும். என்னையுன்னை யின்னதிது வென்னுமனிற்குநிலை— தன்னையருளென்றதருணைத்தில், அன்னைபெற்ற பிள்ளைக்குஞ் சொல்லாத பெற்றி கண்டாயையனே — உள்ளத்தினுள்ளேயுணர். எனவும்) பந்தமறு மெய்ஞ்ஞானமான மோனப்பண்பொன்றையருளியந்தப் பண்புக்கேதான் — சிந்தையிலை நானென்னும் பான்மையில்லை. எனவும்) மற்றும் வருவனவற்றுற் காண்க.

சிதம்பர சுவாமிகளருளிச்செய்த திருப்போரூர் சந்நிதிமுறை.

அரிவையரென வருகாகத் திரள்களை யணுகேல் என்ற திருப்பாடலில் (பொருவரு சமயக்காடணுகேல் தற்போதமுரத்தெழும் வாதமலைக்கும் — எனவும், வட்டாட்டாகு மெங்கள் பவமாற்ற வருக,) என்ற திருப்பாடலில், (தட்டாதிருந்த சிவமென்றுந் தானென்றிருக்கு மயலகற்றித் தானே யதுவாயது தானய்த்தயங்குமோனந்தரவருக) எனவும், ஒருபொருளினிடத்தினிற் சச்சிதானந்தமுடனுருவ நாமமுமுள்ளதென் றுரைதந்து முன்பு பினருண்டாய் விளங்கி யுறுபிரியமாயுள மூன்றுமே—மருளிரியவருமெய்ம்மை யுருவநாமம்பொய்ம்மைவன்பழுதையுர கவுருவின் மாறுதறிந்திடுதிபின்பழுதைநன்று மதித்தவர்க்கரவின்மையால் — இருளறும்பிரமமே நிதழுமற் றொருபொருளு

மெதிரிட்டிலங்காதென வேழ்பிறவிவாரிதியி லாழுமெனை வா வென்றெடுத்தருளளித்தகுரவா — எனவும், அறிவு தன்னினை விற்கலந்துறும்போதி லரும்பரமுயிர் சகமுலைவாம் — பிறிவி லவ்வறிவந் நினைவினையகன்றாற் பேதாபேதங்க ளொன்றின்றி — நெறியுறத்தானே தன்னிடத்திருக்கு நிச்சயமென் றெனக் கிசைத்தான் — பொறிமறுமார்பன் மருகவேளெனையாள் போ ரிவாழாறுமாமுகனே— என்ற, திருப்பாடல்முதலாக, நினைவறி வெனவும், பரனது முகத்திற்கெனவும் ; அறிவினை நோக்கில் எனவும், எதொரு நினைவிங் கெழுமது மனமெனவும், சச்சிதா னந்தமெனும் பெயரெனவும், சுருதியின் றுணிவால் எனவும், நிச்சயஞானஞ் சமாதி ஞானங்களெனவும், சித்தொரு நான்கி லெனவும், ஓதுருநாமமி யானென்ன தசுத்தமெனவும், அருளிச் செய்திருக்குந் திருப்பாடல்களாலும் மற்றும் வருவனவற்றாலுங் காண்க.

(குமார குருபர சுவாமிக ளருளியது) பூதங்கடந்த புகழ்க் கூடற்சம்பந்தன் போதித்தசொல்— வாதங்கடந்து மனோலயமா யிந்து மண்டலம்போய் — நாதம்கடந்து நடுவெளிதாண்டி நலஞ் சிறந்த — போதங்கடந்தின்பப் பூரணமாகிப் பொலிந்ததுவே— ஞானங்களைப் புலப்படுத்தும் அடியில்வரும் செய்யுள்களை வீடடைய விரும்புமெய் யன்பர்கள் கவனிக்க.

மஹேதிகாசமாகிய சிவ ரகசியத்துள் ஆறாவதம்ஸம் ரிபு கீதை 44வது அத்தியாயம்.

பூதியினா லங்கமெலா நன்றாய்ப்பூசி, பொருவிறிரிபுண்டர மு மணிந்துகொண்டு — மாதவனே நியமமுடனுருத்திராக்கம், மாலைகளுஞ் சிரமுதலிற் றரித்துக்கொண்டிங் — கோதியிடுமு ருத்திர பஞ்சாட்சராதி யுத்தமமா மந்திரமுஞ் செபித்துக்கொண் டு — நீதியுடனிகழுமகா லிங்கத்தின்கண் நித்தியமா யருச்சனை யுஞ் செய்யவேண்டும்.

அத்தனுடைப் பூசனைபோலன்பர்பூசை யனுதினமுமாதா வா யியற்றவேண்டும் — உத்தமமா யோதியவோர் சிவதலத்தில் உடலுள்ள பரியந்தம் வசிக்கவேண்டும் — சுத்தமதாம்சிவநாம கீர்த்தனத்தைச் சோர்வறவே சந்ததமும்செய்யவேண்டும்— மெத்தவுமே யுத்தமமாஞ் சாம்பமூர்த்தி மேனியுடைப் பாவனையும் பண்ணவேண்டும்.

மாதவனே யோதியவிச் செய்கையெல்லா மகத்தான ஞானங்க மென்னலாகும் — ஓதியவிவ் வங்கமுடன் சிரவணாதி யுற்றவரே பரமசிவ னருளினாலே — ஆதிமுடி வொன்றுமிலா வகண்டஞான மடைந்ததனு லஞ்ஞான மனைத்துநீங்கிப் — பீதிசெயு மனுதிபவ பந்தந் தீர்ந்து பின்னமிலாப் பரப்பிரம சொரூபமாவார்.

பூதியினாலணிந்ததிரி புண்டராதி பொருந்தினரேவேதாந்த விசாரந்தன்னி —லேதமிலாவதிகாரி மிசைந்தோராவா ரிதரரெல்லாமதிகாரி யாகமாட்டார் — வேதமுடியிவ்விதமே விதிப்பதாலே வேதவிதிக்கயலான விதியொன்றுண்டோ — ஆதலினாலறைந்தவதிகாரம்பெற்றே யகண்டபர விசாரணையைச் செய்யவேண்டும்.

அருந்தவனே விபூதியுடைத் தாரணாதி யங்கமெலா மில்லாமற் சமதமாதி— விரிந்ததிடசந்நியாசி யானபோதும் விசாரணையிலதிகாரி யாகானன்றேன் — பொருந்தியவன் விசாரணையே செய்தபோதும் பூரணமாம் பரமசிவ னருளிலாதா — னிரந்தரமாம்பரப்பிரம ஞானஞ்சாரா னிகழ்த்தியது நிச்சயமே யையமில்லை.

அம்மையார் அருளிச்செய்த அற்புதத் திருவந்தாதி.

அறிவானுந்தானே யறிவிப்பான்றானே — யறிவா யறிகின்றான்றானே, யறிகின்ற — மெய்ப்பொருளுந்தானே — விரிசுடர் பாராகாய — மப்பொருளுந்தானே யவன்.

நூலறிவுபேசி நுழைவிலாதார்திரிக — நீலமணிமிடற்றானீர்மையே, மேலுலந்த — தெக்கோலத் தெவ்வுருவா யெத்தவங்கள் செய்வார்க்கு — மக்கோலத்தவ்வுருவேயாம்.

பிரானவனைநோக்கும் பெருநெறியேபேணிப் — பிரானவன்றன்பேருளேவேண்டிப் பிரானவனை — யெங்குற்றா னென்பீர்க ளென்போல்வார் சிந்தையினும் — இங்குற்றான் காண்பார்க் கெளிது.

கண்டெந்தை யென்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்யேனே — லண்டம்பெறினு மதவேண்டேன் — எனவும், இடர்களையாரேனு மெனக்கிரங்காரேனும் — எனவும், இறைவனேயெவ்வுயிருந் தோற்றுவிப்பன் — எனவும்.

ஆர்வல்லார்காண வரனவனையன்பென்னும் — போர்வையதனாலே போர்த்தமைத்துச், சீர்வல்ல — தாயத்தானுமுந் தனிநெஞ்சி · னுள்ளடைத்து — மாயத்தால்வைத்தோ மறைத்து. எனவும், வரும் திருப்பாடல்களாலும், மற்றும் வருவனவற்றானுங் காண்க

ஸ்ரீ பட்டினத்தடிகள் அருளிச்செய்த திருப்பாடல்கள்.

உழப்பின்வாரா வுறுதிகளுளவோ — கழப்பின்வாராக் கையறவுளவோ — அதனால் — நெஞ்சப்புனத்து வஞ்சக்கட்டையை — வேரறவகழ்ந்துபோக்கித் தூர்வைசெய்து — அன்பெனும்பாத்திகோலி முன்புற — மெய்யெனு மெருவைவிரித்தாங் கையமில் — பத்தித்தனி வித்திட்டு நித்தலும் — ஆர்வத்தெண்

ணீர்பாய்ச்சி — நேர்நின்று — தடுக்குநர்க்கடங்கா திடுக்கண்செ
ய்யும் — பட்டியஞ்சினுக்கஞ்சி, யுட்சென்று — சார்ந்தவேலி
கோலி வாய்ந்தபின் — ஞானப்பெருமுளை நந்தாதுமுளைத்துக்
கருணையிளந் தளிர்காட்டவருகா — காமக்குரோதக்களை யறக்க
ளைந்து — சேமப்படுத்துழிச் செம்மையினோங்கி — மெய்மயிர்
புளக முகிழ்த்திட்டம்மெனக் — கண்ணீரரும்பிக் கடிமலர்மலர்
ந்து — புண்ணியவஞ்செழுத் தருங்காய்தோன்றி, நஞ்சுபொதி
காளகண்டமுங், கண்ணொருமூன்றுங் — தோளிருநான்குஞ், சு
டர்முகமைந்தும் — பவளநிறம்பெற்றுத் தவளநீறுபூசி — அறு
சுவையதனினு முறுசுவை யுடைத்தாய்- காணினுங்கேட்பினுங்
கருதினுங்களிதருஞ் — சேணுயர்மருத மாணிக்கத் தீங்கனி—
பையப்பைய பழுத்துக்கைவர — எம்மனோர்க ளினிதினிதருந்
திச்— செம்மாந்திருக்கச் சிலரிதில்வாராது — மனமெனும்புன
த்தை வறும்பாழாககிக் — காமக்காடுமூடித், தீமைசெய் — ஐம்
புலவேட ராறலைத்தொழுக — வின்பப்பேய்த்தே ரெட்டாதோ
டக் -- கல்லாவுணர்வெனும் புல்வாயலமற — விச்சைவித்துநி
ர்த்துழி யானெனப்பெயரிய — நச்சுமாமர நனிமிகமுளைத்துப்-
பொய்யென்கவடுகள் போக்கிச்செய்யும் — பாவப்பஃறழை பர
ப்பிப்பூவெனக்— கொடுமையரும்பிக் கடுமைமலர்ந்து—துன்பப்
பல்காய் தூக்கிப்பின்பு — மரணம்பழுத்து நரகிடைவீழ்ந்து—
தமக்கும் பிறர்க்குமுதவா — திமைப்பிற்கழியு மியற்கையோ
ருடைத்தே,

பருத்திப்பொதியினைப் போலேவயிறு பருக்கத்தங்கள் —
துருத்திக்கறுசுவை போடுகின்றார்துறந்தோர்தமக்கு — வருத்தி
யமுதிட மாட்டாரவரை யிம்மாநிலத்தி — லிருத்திக்கொண்டே
னிருந்தா யிறைவாகச்சியேகம்பனே,

பொருளுடையோரைச் செயலினும்வீரரைப் போர்க்களத்துந் — தெருளுடையோரை முகத்தினுந்தேர்ந்து தெளிவதுபோல் — அருளுடையோரைத் றவத்திற்குணத்தி லருளிலன்பி — விருளறுசொல்லினுங் காணத்தகுங்கச்சி யேகம்பனே.

கொல்லாமற் கொன்றதைத் தின்னுமற் குத்திரங்கோள்களவு — கல்லாமற் கைதவரோடிணங்காமற் கனவிலும்பொய் — சொல்லாமற்சொற்களைக் கேளாமற்றோகையர் மாயையிலே — செல்லாமற் செல்வந்தருவாய் சிதம்பரதேசிகனே.

ஓடாமற்பாழுக் குழையாமலோர முரைப்பவர்பாற் — கூடாமனல்லவர் கூட்டம்விடாமல்வெங் கோபநெஞ்சி — னூடாமனன்மை வழுவாமலின்றைக்கு நாளைக்கென்று — தேடாமற் செல்வந்தருவாய் சிதம்பரதேசிகனே — என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க.

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

சிதம்பரம் ஸ்ரீ மௌனதேசிக ராதீன கர்த்தராகிய

ஸ்ரீலஸ்ரீ சேல்லப்ப சுவாமிகள் இயற்றியு

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூமேவு புலவர்களு முணர்வரிய மெய்ஞ்ஞானப் பொருளாமுண்மை — தாமேவச் சத்தியசன்மார்க்கப்பிரகாசிகையாந் தனிநூறன்னைப்—பாமேவு புலவரெலா மின்பமுறப் பகர்ந்தனனிப் பாரின்மீதே — தூமேவு சீர்முத்து ராமலிங்கமெனும் பெயர்நற் சுகுணன்றானே, 1

வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்று வீண்வாதம்விளம்பிப் பொல்லா — வாதாந்தப் படுகுழியின் வீழ்ந்துமதி மயங்காமன் மகிமைமன்னும்— போதாந்த நிலையுணர்ந்த புண்ணியர்கள் கொண்டாடப் புவியின்மீதே — நாதாந்த முணர்ந்தமுத்துராமலிங்க மாதவனூல் நவின்றான் மாதோ. 2

இந்நூலிற்கூறும் விடயங்களைநன் ருராயினிணையிலாத— முன்னூலிற்கூறு மரும்பெரியவிடயங்களெலா முறையேதோன்றும் — எந்நூலுமிதற்கிணை யாகாதென்றேமேலோர்க ளியம்புவாரிந்— நன்னூலின் சிறப்பதனை யிவ்வளவிற்றென நாவான விறற்பாற்றே. 3

உ

முருகன்றுணை.

சிறப்புப்பாயிரம்.

திருக்கைலாயபரம்பரை திருவாவடுதுறையாதீன மஹா
வித்துவான் ம-ா-ா-ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை
யவர்கள்மாணாக்கர்களிலொருவரும் ஸ்ரீகாஞ்சி
புரம் பச்சையப்பமுதலியார்கல்விச்சாலைத்
தமிழ்ப்பண்டிதருமாகிய ,ம-ா-ா-ஸ்ரீ
தி. சு. வேலுசாமி பிள்ளை யவர்கள் பாடிய
ஆசிரியப்பா.

ஒளிமிகுபொற்சபையுண்ணடமுஞற்றி
யளிமிகுமன்பர்கட்கானந்தமளிக்கு
மம்பலவாணனருளியவருமறைச்
செம்பொருளுணராச்சிவார்ச்சனலமிகு

மம்புவிதனின்மிகுமாதரவோடு
வம்புகளாம்பெருவாதநெறிகளிற்
குன்றிடைமுட்டியகுரீஇயைப்போலச்
சென்றிடர்ப்பட்டுத்திகையாவண்ணஞ்
சான்றோரருளாற்சாற்றுநன்னூல்களை
யான்றோர்மரபையனுசரித்தருளா
னன்றாராய்ந்துநற்பொருளுணர்ந்து
பின்றானந்தப்பெருநூற்பயனைத்
தானடைந்ததுபோற்சகத்துளோரடையப்
பற்பலசரித்திரம்பாக்கவினடையி
லெற்பெறவியம்பினனினிமைதோன்ற
வன்னூல்பாவலர்க்கன்றிமற்றையர்க்குச்
செந்நூற்பொருள்கடெரியாதாதலிற்
பெரியார்பலரும்பேசுநூல்கடல்போல்
விரிவாமவற்றுள்வியன்பொருளனைத்தின்
சாரந்தன்னைத்தமிழ்மொழியதனு
லீரமாகுமினிமையோடுயர்சீர்
மன்னுசத்தியசன், மார்க்கப்பிரகாசிகை
யென்னுநூலையியற்றினனதனுட்
செப்பியிருக்குஞ்செம்பொருளென்னெனி
லான்மநேயவைக்கியமருவலும்
பான்மையாஞ்சமயப்பகைமையொருவலுஞ்
சீவகருணைதிகழ்தலுமென்றும்

பர்வமகலலும்பல்லுயிரோம்பலு
முண்மைத்தெய்வமுண்டெனத்துணிந்து
திண்மையுளத்திற்சிந்தனைசெய்தலுஞ்
சுயநலங்கருதாத்தூயமனத்தி
லுயர்நலமுயிர்களுறும்படிமுயறலு
மெத்தேயத்தருமின்புறச்செய்தலும்
பித்தாமுலகியற்பேதமொழித்தலும்
விதப்பாயழகியமேனிலையனைத்து
முதற்பாகத்தின்மொழிந்தனனதாஅன்று
சத்தாந்தன்மைதானோர்ந்தறிதலுஞ்
சித்தாந்தன்மைதேர்ந்துதெளிதலுஞ்
சுகவியலதனைச்சோதித்துணர்தலு
மகவியலதனையாய்ந்துதுணிதலு
மனவியல்பதனைமாறின்றியுணர்தலுங்
கனமனமென்னுங்கருத்தையடக்கலும்
வாசனையோர்ந்துநல்வாசனைபயிறலு
நேசரையோர்ந்துநன்னெஞ்சிலிருத்தலு
மீசனையோர்ந்தவனிணையடிதொழுதலும்
பரசமதகன்றுநற்பரகதிபுகுதலுஞ்
சீவன்முத்தர்செய்கையுமாண்பும்
ஓவலின்றியுலகியற்பண்பும்
வாதிகள்கூறும்வழக்கினியல்பவை
நீதியொடுபொருந்தாநிலையென்னுந்தன்மையு

முதியோர்கூறியமுறையேமேற்கோள்
விதியோர்சிறிதும்வேறுபாடின்றி
யிரண்டாம்பாகத்தியாவரும்விரும்ப
முரண்டானின்றிமொழிந்தனனதா அன்று
பஞ்சாக்கரத்தின்பாகுபாடெல்லா
மெஞ்சாதழகாயியம்பியதோடு
மோங்காரத்தியலொருங்கேயுணர்ந்துபே
ராங்காரத்தியலகன்றேயென்றும்
பாங்காயாவரும்பயனடைந்தின்புற
நீங்காவருளொடுநிகழ்த்தினன்மற்று
மாவாக்கியத்தின்மாண்பொருளனைத்தும்
பூவாழ்புண்ணியர்புத்தியிற்றெளிய
மூன்றும்பாகத்துரைத்தனன்முறையே
நான்முனற்றநன்னுவலர்புகழ்வோ
னன்னவன்யாரெனிலகிலவாழ்வனைத்து
மின்னலென்றகன்றவியற்கைத்துறவினன்
பன்னருஞ்சிறப்பினன்பாவலர்க்கினியவன்
துன்னினர்தம்மைத்தூய்மைசெய்வாய்மையன்
மண்ணவர்புகழுமாண்பினன்மாதவ
னின்னலைமாற்றுமிறையடிக்கன்பன்
முன்னவன்முக்கணன்முருகவேளைங்கரன்
றன்னிகர்மலைமகடவப்பெருந்தொண்டர்
பொன்னடிபோற்றிப்புகழ்ந்துநற்றமிழிற்

கன்னலமுதெனக்கவிமழைபொழிவோன்
பன்மார்க்கங்களும்பரவுறமேலாஞ்
சன்மார்க்கத்தின் றனிப்பிரசங்கன்
சமயவாதிகள்சழக்கையறுப்போன்
அமையக்கற்றகமமைதியடைந்தோன்
பொன்புவிபுகழொருபொருளெனமதியா
னுன்பரம்பொருளேயுன் னுளன் மதியான்
கற்பனையாவுங்கழன்றோன்மூவாச்
சிற்பானருள்பெறூஉஞ்சிறப்பினன்சிதம்பர
முத்துராமலிங்கமுனிவர
னித்தியானந்தநிறைவாழ்வினனே.

உ

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

சகச நிட்டாபாராகும் ஸ்ரீமத்,
அறிவானந்த யோகிகள் இயற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உலகினிற்சமயவாத ருரைத்தநூன்மயக்கநீங்க
நலமுறுமுத்துராம லிங்கமாதவனவின்ற
கலகமில்சத்தியசன்மார்க்கப்ரகாசிகையென்றோதும்
புலவர்தேர்ஞானநூலாற்பொய்ம்மைபோய்மெய்ம்மையாமே.
